# இந்திய அஞ்சல் துறை

## செல்வமகள் சேமிப்பு திட்டம்

அன்பார்ந்த பெற்றோர்களே..!

மத்திய அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ள செல்வமகள் சேமிப்பு திட்டம் ( Sukanya Samriddhi Yojana ) பெண் குழந்தையின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உறுதியளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- பத்து வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கான புதிய சேமிப்பு திட்டம். (துவக்க கால சலுகையாக 2.12.2003 - க்குப் பிறகு பிறந்த பெண் குழந்தைகளுக்கு ).
- இந்தக் கணக்கு அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் பெண் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்து துவங்கலாம்.
- பெற்றோர் / காப்பாளர் ஒரு குழந்தைக்கு ஒரு கணக்கு மட்டுமே துவங்கலாம். ஒருவர் அதிகபட்சமாக 2 பெண் குழந்தைகளுக்கு 1 கணக்கு வீதமாக 2 கணக்குகள் ஆரம்பிக்கலாம்.
- இதற்கு 8.6 % ஆண்டு கூட்டு வட்டி 2016 - 17 நிதியாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.
- கணக்கு துவங்க குறைந்த பட்ச ஆரம்ப முதலீடாக ரூ.1000 / - தொடர் சேமிப்பாக 100 / - மடங்காக பணம் செலுத்தலாம். ஒரு நிதியாண்டிற்கு குறைந்த பட்சம் ரூ.1000 / - அதிகபட்சமாக ரூ.1,50,000 / - செலுத்தலாம்.
- கணக்கு துவங்கிய தேதியில் இருந்து 14 வருடம் பணம் செலுத்தலாம்.
- கணக்கு துவங்கிய தேதியில் இருந்து 21 வருடம் கழித்து கணக்கு முதிர்வடையும்.
- பெண் குழந்தைக்கு 18 வயது முடிவு அடைந்தவுடன் கணக்கில் உள்ள இருப்புத் தொகையில் 50 % பணத்தைப் பெண்ணின் மேற்படிப்பிற்காகவோ, திருமணத் - திற்கோ எடுத்துப் பயன் பெறலாம்.
- பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு கணக்கு முதிர்வடைவதற்கு முன்பே கணக்கை எவ்வித வட்டி இழப்புமின்றி முடித்துக் கொள்ளலாம்.
- ஆண்டு தோறும் சேமிக்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு 80 (C) படி உண்டு

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள அஞ்சல் அலுவலகத்தை அணுகவும்.

**Registered with RNI under No. TNTAM / 2004 / 14287**
**Published on 15.06.2017. Postal Registration No. VGR / 004 / 2015 - 2017**
**Posted at RMS Virudhunagar**

**If un delivered please return to :**
**Payanam Publishers**
**Melathulukkangulam ( P. O )**
**Mallanginar**
**virudhunagar ( Dt ) - 626 109**

**To,**





- செயல் -
அதுவே சிறந்த சொல்

பொதுவுடைமை தத்துவ, அரசியல், பண்பாட்டு இலக்கிய இதழ்

# பயணம்

கருத்தாலும், கரத்தாலும் இணைவோம்

பாதை-1, ஜூன் 2017, தடம் - 120

## வாழ்வியல் ஒளி.!

1. **தலைக்கனம்** தவிர்த்திடு
தகாத நடத்தை கைவிடு.

2. **விமர்சனம்** செய்
விமர்சனம் கொள்.

3. **மொழி** வெறி தகர்த்திடு
மொழி நயம் காத்திடு.

4. **ஆசைக்கு** வேலியிடு
அறிவுக்குப் பாதையிடு.

5. **மோகத்தின்** வேகம் தவிர்
தாகத்தின் தவிப்பை உணர்.

6. **குறுங்குழு** வாதம் விடு
குறுகிய பார்வை விடு.

7. **ஒன்றி** வாழ உறுதி கொள்
ஒற்றுமையில் அழகு கொள்.

8. **அகலக்** கால் தவிர்த்திடு
அடியை படியாய் உயர்த்திடு.

9. **தேங்கி** நிற்பது நாறும்
தெளிந்த நீரோடை ஆகு.

10. **பொதுவை** உள்வாங்கு
சுயத்தைப் பொதுவாக்கு.

11. **சோதனைகள்** சுமந்திடு
சாதனைகள் அறிந்திடு.

12. **செய்திறனை** மேம்படுத்து
செயற்பாட்டை நெறிப் படுத்து..

13. **பரிசுக்குப்** பணியாதே
பணியில் தயங்காதே.

14. **உண்மை** கவர்ச்சி தராது
உண்மையே வளர்ச்சி தரும்.

15. **வரலாற்றை** அறிந்திடு
அறிந்தவற்றை வழங்கிடு.

16. **கற்றவன்** என கர்வம் கொள்ளாதே
அற்பத்தனத்திற்கு அடிமையாகாதே.

17. **கடமையில்** நேரத்தை நகர்த்து
போதுமென்றே போகத்தை ஒதுக்கு.

18. **சுரண்டல்** அமைப்பை உணர்ந்திடு
சூழ்ச்சி அரசியலை எதிர்த்திடு.

19. **சாதி** உணர்வைப் பொசுக்கு
சாதிப் பிரிவினையை நசுக்கு.

20. **நான்மறை** அமைப்பை உடைத்திடு.
நல்லதோர் அமைப்பை படைத்திடு.

21. **கொள்கைக்காக** உழைத்திடு
உழைப்பையே கொள்கையாக்கிடு.

22. **மதவெறி** தடுத்திடு
மனிதநேயம் காத்திடு.

23. **வீரம்** என்பது நேர்மையின் பெயர்
நேரம் கடத்தும் வாதம் தவிர்.




24. **தொண்டால்** நாளினை நகர்த்து
பண்பால் வாழ்வினை நிரப்பு.

**- அமரர். பி.கே. சுப்பிரமணி -**

**ரூ.10**

## பயணம் பதிப்பக வெளியீடுகள்



| தடம் - 1 | தடம் - 2 | தடம் - 3 | தடம் - 4 | தடம் - 5 |
|---|---|---|---|---|

| நூல் | நூலாசிரியர் | விலை |
|---|---|---|
| 1. விருதுநகர் மாவட்ட சாலியர் வாழ்வியல் (கட்டுரை) | அருப்புக்கோட்டை இராஜபாண்டி | ரூ.25/- |
| 2. கைக்குட்டை கனவுகள் ( கவிதை ) | தேவராஜ் விட்டலன் | ரூ.20/- |
| 3. பகத்சிங் மணி மொழிகள் | பாவலர். கருமலைப் பழம் நீ | ரூ 40/- |
| 4. நிகழ்வெளி ( கவிதை ) | கவிஞர் சு. மதிவண்ணன் | ரூ 50/- |
| 5. பயணங்கள் விதைத்தது (கவிதை) | பாடுவாசி ரகுநாத் | ரூ 30/- |

நூல்கள் வேண்டுவோர் நூலுக்குரிய பணத்தை பயணம் முகவரிக்கு அனுப்பவும்


பயணம் தமிழகமெங்கும் தடம் பதிக்கட்டும்



**செல்வன் கார்க்கி மெழுகுவர்த்திகள்**

எங்களிடம் ஐந்து வகையான மெழுகுவர்த்திகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

ஒவ்வொரு மாதமும் மெழுகுவர்த்தி செய்யும் முறை கற்றுத் தரப்படும்.




செல்வன் கார்க்கி குறுந்தொழிலகம்
மேலத்துலுக்கங்குளம்
மல்லாங்கிணறு - 626 109
கை பேசி : 936 312 5082.




# அனைத்திந்திய முற்போக்குப் பேரவை
## ( All India Progressive Forum )

அன்புடையீர்..!

வணக்கம்..!

அனைத்திந்திய முற்போக்குப் பேரவை என்ற அமைப்பு புதிதாக அகில இந்திய அளவில் தொடங்கப்பட்டுள்ளது.

☞ கல்வி - வேலை வாய்ப்பு - சுகாதாரம் - மருத்துவம் - பாதுகாப்பான குடி நீர் - சுற்றுச் சூழல் - புவி வெப்பமயமாதல் - அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி - சாதி - தீண்டாமை - சமத்துவமின்மை - மத வாதம் - பயங்கரவாதம் - பாலியல் வன்கொடுமைகள் - பாலின சமத்துவம் பெண்களின் உரிமைகள் - தேசிய இனப் பிரச்சனைகள் - நதி நீர்ப் பிரச்சனைகள் - தண்ணீர் கொள்கை - தேர்தல் சீர்திருத்தம் - விவசாயம் - தொழில் துறை - வர்த்தகம் - கலை - இலக்கியம் - பண்பாடு - அன்றாட சமூக நிகழ்வுகள்.... உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகள் குறித்து விவாதித்திடவும், அவற்றின் மீது சரியான கருத்துக்களை உருவாக்கவும், அக்கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் அனைந்திந்திய முற்போக்குப் பேரவை தொடங்கப்பட்டுள்ளது.

☞ ஒவ்வொரு தனிநபரின் முழுமையான படைப்பாற்றலை வெளிக் கொணரவும், ஒவ்வொரு நபரின் தங்கு தடையற்ற சுதந்திரமான வளர்ச்சிக்கும் வாய்ப்பளிக்கும் சமூக அமைப்பை உருவாக்க இந்த அமைப்பு பாடுபடும்.

☞ இந்த அமைப்பில் இணைந்து செயல்பட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ஒன்றுபட்டுச் செயல்படுவோம்..! உன்னதமான சமூகத்தைப் படைத்திடுவோம்..!

இவண்
அனைத்திந்திய முற்போக்குப் பேரவை
41, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை - 600 0 43
செல் : 9940664343, 9444183776
Website : www.progressiveforum.in

**உறுப்பினர் கட்டணம் : ஆண்டுச் சந்தா ரூ.100. - மாணவர்களுக்கு ரூ.50**

Published & Owned by R. Sundararaj. Published from 4/255 Melathulukkangulam Mallanginar (Via) Virudhunagar ( Dt ) - 626 109. Editor's & Printer's R. Sundararaj

புத்தகங்களை நேசிப்பவர்கள். எப்படி தெரியுமா..? மனிதர்களைப் போலவே புத்தகங்களுக்கும் இதயம் இருக்கிறது.

சில புத்தகங்கள் உழைக்கச் சொல்லும். சில அழச் சொல்லும். சில சிரிக்கச் சொல்லும். சில காயப்படுத்தும், சில காயங்களுக்கு மருந்து தடவும். சில வாழச் சொல்லும். சில வாழ்ந்ததைச் சொல்லும். இப்படி ஒவ்வொரு புத்தகத்திற்கும் இதயம் இருக்கின்றது.

உங்களுக்குள் மறைந்திருக்கும் மனிதத்தை, புத்தக வாசிப்பு மட்டுமே உருக வைக்கும் என்பார் அறிஞர் பிரான்சிஸ் காப்கோ. ஆம்..! உண்மைதான்.

அருணிமா சின்கா என்ற பெண்மணி, தேசிய கைப்பந்து, கால்பந்து ஆகியவற்றில் பங்கு பெறும் விளையாட்டு வீராங்கனை. 2011 ஏப்ரல் 11 ம் தேதி லக்னோவிலிருந்து டில்லி செல்லும் பத்மாவதி விரைவு ரயிலில் தேர்வு ஒன்று எழுதுவதற்காக பயணம் செய்தார்.

அவர் கையில் இருந்த பையையும், கழுத்தில் இருந்த சங்கிலியையும் பறிக்க வந்த திருடர்களை எதிர்த்துப் போராடிய போது ரயிலிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

தண்டவாளத்தில் தடுமாறி விழுந்த அந்தப் பெண்மணி சுதாரித்து எழுவதற்குள், தடத்தில் வந்த ரயில் அவரது வலது கால் மேல் ஏறியது. இந்தத் தடத்தில் ரயில்கள் சென்று கொண்டே இருந்தன. அக்கம் பக்கத்தினர் அவரைக் காப்பாற்றி மருத்துவ மனையில் சேர்த்தனர். அவரது கால் அகற்றப்பட்டது. செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. 2013 மே 21 ல் 52 நாட்கள் அவகாசம் எடுத்துக் கொண்டு, இமய மலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தார்.

‘ ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் ’ என்ற பாடல் மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் கூறப்பட்டதுதான். வகுப்பறையில் படிக்கும் புத்தகங்கள் தேர்வுக்கான பாடப்புத்தகங்கள். அவை பாடங்களை மட்டுமே கற்றுத் தருகின்றன. வாழ்க்கையை அல்ல. வாழ்க்கையைப் படிக்க அதைத் தாண்டி வாசக சாலைக்கு வர வேண்டும். அந்த வாசக சாலைதான் நூலகம்.

வீட்டைத் திறக்க திறவுகோல் இருப்பதைப் போல, அறிவைத் திறக்கும் திறவு கோலே நூலகம். (நன்றி : தினமலர் நாளிதழ், 30.12.2015 )





பொதுவுடைமை தத்துவ, அரசியல், பண்பாட்டு, இலக்கிய இதழ்.

**பயணம்**

**ஆண்டு நன்கொடை ரூ.100.**

**நிறுவனர் :**
**அமரர் பி.கே. சுப்பிரமணி**

**ஆலோசகர் குழு :**
பா.உஷாராணி,
சு.சுந்தரி,
அ.ராஜா சொர்ணசேகர்.
மீ.க. சுந்தர்,
பெ.அறிவுடைநம்பி,
திலக்,
பாவலர்.கருமலைப் பழம் நீ.

**சட்ட ஆலோசகர்கள் :**
எம். சுப்புராம் B.Com., B.L.,
உ. மகேந்திரன் M.Com.,B.L.,

**புகைப்படக் கலைஞர் :**
M. சின்னராஜா B.B.A.

**வெளியீட்டாளர் :**
இரா. சுந்தரராஜ்.

**சந்திப்பு முகவரி :**
பயணம் பதிப்பகம்,
பேரூராட்சி வணிக வளாகம்,
மல்லாங்கிணறு

**வங்கி மூலம் பணம் அனுப்ப :**
Name : R . SUNDARARAJ,
A / C NO : 1092 188 3723
S B I, VIRUDHUNAGAR,
IFSC : SBIN0000951.

**சந்தா, படைப்புகள் அனுப்ப :**
பயணம் இலக்கிய இதழ்,
மேலத்துலுக்கன்குளம்,
மல்லாங்கிணறு (வழி),
விருதுநகர் (மா) – 626109.
பேச : 936 312 5082.

## உள்ளே..

4 தலையங்கம் / ஆசிரியர்

8 சிறுகதை / கலவை சண்முகம்
**ப (ா) ட ம்**

16 கட்டுரை / ரஞ்சனி பாசு
**உலகப் புத்தக நாள்**

20 கட்டுரை / சிவலை இளமதி
**சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள்** நூலின் முன்னுரை

32 கட்டுரை / ஜோதிமதி
**பொதுவுடைமை போராளிகள் தோழர் பி. ஸ்ரீனிவாசராவ்**

38 கட்டுரை / கார்த்திக்.ப
**நடமாடும் மதப் பிரச்சார வாகனங்கள்**

40 கட்டுரை/பேரா.க.ராமச்சந்திரன்
**நூலகம் அறிவு திறவுகோல்கள்**

**கவிதைகள்**
வல்லம் தாஜுபால்
தேவராஜ் விட்டலன்
கவிமுகில் பெ. அறிவுடைநம்பி
கவிஞர் த. அனந்தராமன்
கவிஞர் தமிழன்பன் ப.முத்துச்சாமி
ஜே. ஷாஜகான்
பாவலர் கருமலைப்பழம் நீ
கவிஞர் சுந்தரபழனியப்பன்

மற்றும் வாசகர் கடிதங்கள்,
சமூகவியல் மொழிகள்,
சின்னச் சின்ன சிந்தனைகள்,
இனிய தகவல்கள்,
நூல்கள் அறிமுகம்.

அன்புமிக்க தமிழ் உள்ளங்களுக்கு வணக்கம்..!

**த**மிழ் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என வகைப்படுத்தி, ஒவ்வொரு வகை நிலத்திலும் நம் மக்கள் செல்வச் செழிப்போடு சீரும் சிறப்புமாக வாழ்ந்ததை இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. மிகப் பழங்காலத்திற்குக் கூடப் போகவேண்டாம், சுமார் 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊரைச் சுற்றி இருபதுக்கும் மேற்பட்ட பம்பு செட் கிணறுகள் இருக்கும். அதிகாலையில் பம்பு செட் மோட்டாரை அடித்து விட்டு, விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

காலையில் எழுந்து எந்த திசையில் சென்றாலும் அங்கு பம்பு செட் மோட்டார் ஓடிக்கொண்டிருக்கும். ஊரிலுள்ள இளைஞர்கள், முதியோர்கள், சிறுவர்கள் எல்லோரும் பம்பு செட்டில்தான் குளிப்பார்கள்.

பம்பு செட்டைச் சுற்றி தோட்டம் பச்சைப் பசேல் என ஏதாவது ஒரு பயிரைச் சுமந்து கொண்டு செழித்து இருக்கும். ஒரு நாள் போல் தினமும் எங்கள் கிராமத்திலிருந்து காய்கறி மூட்டைகள் நகரத்திலுள்ள கமிஷன் கடைகளுக்குச் சென்று கொண்டிருக்கும். எங்கள் ஊர் காய்கறிகளைத்தான் வாங்க வேண்டும் என்று சில்லரை வியாபாரிகள் கமிஷன் கடைகளில் காத்துக் கொண்டிருப்பார்கள்.

ஊருக்குள் முக்கால்வாசி வீடுகளில் ஆடு, மாடுகள் வளர்ப்பார்கள். ஆடு, மாடுகளுக்குத் தேவையான புற்கள், இலை, தழைகள் தோட்டம், காடு கரைகளில் நிறைந்து இருக்கும்.

ஊரில் அங்கங்கு களம் இருக்கும். களத்தில் ஏதாவது ஒரு தானியத்தை காயப்போட்டு பக்குவப்படுத்திக் கொண்டிருப்பார்கள் விவசாயிகள். கடலை விளையும் காலத்தில் கடலை மூட்டையை அவிழ்த்து காயப் போடுவதும், மழை வந்தால் காயப்போட்ட கடலையை ஓடி ஓடி அள்ளுவதும் உற்சாகமான விளையாட்டு போல் இருக்கும்.

ஊரில் உணவுப் பொருட்கள், தானியங்கள், காய்கறிகள் குறைவே இல்லாமல் எல்லோரும் உழைத்தார்கள், உண்டார்கள், உறங்கினார்கள். வாழ்க்கை ஊர் நிரம்பிய தாக, வீடு நிரம்பியதாக இருந்தது.

இன்று நிலைமை தலைகீழாக உள்ளது. ஊரைச் சுற்றியுள்ள கிணறுகளில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை. பச்சைப் பசேல் என இருந்த தோட்டங்கள் காய்ந்து கிடக்கின்றன. விவசாய வேலை பார்த்தவர்கள், காலையில் பஸ் ஏறி சித்தாள், கொத்தனார், நிமிந்தாள், கம்பிக்கட்டு, இந்த மில், அந்த மில் வேலை என நகரங்களுக்குச் செல்கின்றனர்.

எந்த கிராமத்திலிருந்து காய்கறிகள் மூட்டை மூட்டையாக நகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்டதோ, அந்த கிராமத்துக்குள் நான்கு சக்கர வாகனங்களில் வந்து காய்கறிகள் விற்கிறார்கள்.

ஊர் இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தத்தோடு பேசும் போது, காலம் கலியுகமாப் போச்சு, மனுசங்க கெட்டுப் போய்ட்டாங்க அதுதான் மழை இல்ல, தண்ணி இல்ல என்கிறார்கள் மக்கள்.





காளிதாசன் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள் இன்று இல்லை. ஆனால் அவர் எழுதிய சாகுந்தலம் இன்றும் ஜீவித்துக் கொண்டிருக்கிறது. நல்ல புத்தகங்களுக்கு இறந்த காலம் இல்லை. அது போல அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ், ஷேக்ஸ்பியர் போன்ற தத்துவ ஞானிகளும் நம்மோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் புத்தகங்களாய். அவர்கள் எல்லோரும் நம்மிடம் வரமாட்டார்களா என்று ஏங்கித் தவம் கிடக்கின்றார்கள். அவர்கள் தவமிருக்கும் புனித இடம்தான் நூலகம். அது கருத்துக்கள் பிரசவிக்கும் பிரசவ அறை. வரலாறு உதித்தெழும் உன்னத இடம்.

## வாசிப்பவர்களே வாழ்கிறார்கள்


உயிர் வாழ்வதற்கு காற்றை சுவாசிக்கின்றோம். அதைப் போல முறையாக வாழ்வதற்கு நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். ஒரு மனிதன் எத்தனை புத்தகங்களைப் படித்தான் என்பதை வைத்துத்தான் அவன் வாழ்ந்த நாட்கள் கணக்கிடப்படும் என்றார் ஹென்றி டேவிட் தோரா. அதனால்தான் வாசிக்காத நாட்கள் எல்லாம் சுவாசிக்காத நாட்கள் என்கிறோம்.

காரல்மார்ஸின் முப்பத்து மூன்று ஆண்டுகால உழைப்புதான் **மூலதனம்.** இப்புத்தகம்தான் உழைப்பாளியின் வாழ்க்கையை உயர்த்தியிருக்கிறது.

மோகன்தாசாக இருந்த அவரை மகாத்மா காந்தியாக மாற்றியது அவர் படித்த **கடையனுக்கும் கடைத்தேற்றம்** என்ற புத்தகம் தான். திருச்சுழியில் பிறந்த வெங்கட்ரமணரை, மகான் ரமண மகரிஷியாக மாற்றியது அவர் படித்த பெரிய புராணம். **‘ பூமியில் நாம் வாழ்வதற்குத் தருகிற வாடகைதான் , நாம் செய்கிற சேவை ’.** இந்த வரியைப் படித்த பிறகுதான் தெரசாவுக்கு சமூக சேவையின் மீது நாட்டம் வந்தது. வாசித்த அந்த வாக்கியம் தான் அன்னை தெரசாவாக அகிலம் முழுவதும் அறியச் செய்தது. இப்படி பலரும் புத்தகத்தை வாசித்ததால் தான், வரலாறாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## வாழ்வின் திறவுகோல்

வெள்ளைத் தாள்களுக்கு இரண்டு இடங்களில் அதிக மரியாதை இருக்கின்றன. ஒன்று பணமாக மாறும்போது. மற்றொன்று புத்தகமாக மாறும் போது. புத்தகங்களின் தாள்கள் வெறும் தாள்கள் அல்ல. சரியான பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் கால்கள். அந்தக் கால்கள் இருக்கும் நூலகம் நோக்கி கால்களும் பயணமாகட்டும். நூலகத்திற்கு மன நல மருத்துவ நிலையம் என்று பெயரிட்டு மகிழ்ந்தார் எகிப்து நாட்டு அரசர் பாரோ. இது எவ்வளவு அர்த்தம் பொதிந்த வார்த்தைகள். வாழ்க்கையை நேசிப்பவர்கள்



# நூலகங்கள்... அறிவு திறவுகோல்கள்

– பேராசிரியர் க. ராமச்சந்திரன் –

**நூ**லகம், நான்கு எழுத்துக்கள் சேர்ந்த அழகான ஓர் ஒற்றைச் சொல். இந்த ஒற்றைச் சொல்தான் வாழ்க்கை என்ற நான்கு எழுத்துக்கள் கொண்ட சொல்லை வெற்றிப் படிகளில் பயணிக்கச் செய்கின்றது.

வெற்றிப் படிகளிலா, அது எப்படி என்கிறீர்களா..? வாழ்க்கை என்ற இந்த சொல்லின் முதல் பகுதி வா... விகுதி கை... இரண்டையும் சேர்த்தால் **வாகை** என்றாகும். வாகை என்றால் வெற்றி. ஆம்..! வாகைக்குள்தான் வெற்றி இருக்கின்றது. இந்த வெற்றி நூலகத்தில் இருக்கிறது.

நூலகத்திலா அது எப்படி என்று மீண்டும் வியப்படைகின்றீர்களா..? ஆம்..! நூலகம்தான். நூல்களை தம் அகத்தே கொண்ட நூலகம்தான். அத்தகைய நூலகங்களைப் போற்றும் விதமாகத்தான் இந்தியா முழுவதும் நவம்பர் 14 முதல் 20ஆம் தேதி வரை நூலகவாரவிழா கொண்டாடப்பட்டது.

1917 நவம்பர் 14, அப்போதைய மதராஸ் பட்டணத்தில் அரண்மனைக்காரத் தெருவில் கம்பீரமாக இருந்த கோகலே மண்டபத்தில் முதன் முறையாக இந்தியாவில் உள்ள நூலகர்கள் அனைவரும் பங்கு பெற்ற மாநாடு நடைபெற்றது. 1967 ல் இந்திய நூலகச் சங்கம் முதல் மாநாட்டை நினைவுபடுத்தும் விதமாக, அந்த நாளையே தேசிய நூலக வார விழாவாகத் தேர்வு செய்து, அன்று முதல் இந்த விழா கொண்டாடப் படுகிறது. இந்தியாவின் நூலகத் தந்தை என்று போற்றப்படுபவர் தமிழராகிய சீர்காழி எஸ். ரெங்கநாதன். தமிழர்களாகிய நமக்குக் கிடைத்த கூடுதல் பெருமை இது.

## கருத்துக் கருவூலங்கள்

கி.மு. 4 ம் நூற்றாண்டிலேயே நூல் நிலையங்கள் தோன்றிவிட்டன என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. தொடக்கக் காலத்தில் களிமண் ஓடுகளையும், ஏட்டுச் சுவடிகளையும் கொண்டு நூல்கள் எழுதப்பட்டன. 2,700 ஆண்டுகளுக்கு முன் சுமேரியாவில் ஒரு நூலகத்தில் மட்டும் முப்பதாயிரம் மண் பலகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கால மாற்றத்தில் அச்சுப் பொறியும், தாளும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நூல்களும், நூலகங் களும் வளரத் தொடங்கின.





பூமியின் இயற்கைச் சூழல் கெடுக்கப்பட்டதினால்தான் மழை இல்லை என்பதையும், இயற்கைச் சூழலைக் கெடுத்தது லாப நோக்கம் மட்டுமே கொண்ட முதலாளித்துவ பொருளுற்பத்தி முறை என்பதையும், முதலாளித்துவத்தையும், முதலாளித்துவத்தை வளர்க்கின்ற அரசாங்கத்தையும் மாற்றினால்தான் மக்கள் வாழ்க்கையில் செல்வமும், செழிப்பும் வரும் என்பதையும் எப்படிப் புரிய வைப்பது என்றுதான் தெரியவில்லை.

தோழமை அன்புடன் ஆசிரியர்.

## கவிதைத் துளிகள்..

**ஒட்டுவாரொட்டி**

கட்சிப் போஸ்டர் ஒட்டித்
தொற்றிய நோயா..?
சுவரிலும் பிளவு.

**ரௌத்திரம் பழகு**

பறவைகள் எச்சமிட்டன
மரங்களை வெட்டிச்
செய்த பல்லக்கில்.

**அதிகாரம்**

குரைப்பதால், துரத்துவதால்
கடிப்பதால், வெறிகொள்வதால்
அதிகாரமும் நாய்தான்.

**நமக்கேன் வம்பு..?**

ஒத்தூதுதல்
இணைந்திருத்தல் அல்ல
தப்பித்தல்.



**பின் தொடர்வது**

வாக்களிக்கப் பணம் -
துச்சாதனன் தரும்
இலவச சேலை.

பின் தொடரும்
கத்தியை அறியுமோ
பண மாலையில்
மகிழும் ஆடு.

**தங்கமகன்**

உழைப்பில் ‘தங்கம்’ என்றீர்
‘செய்கூலி’ கேட்டால்
சேதாரப் படுத்துவதோ..?

**கூர்**

மயில், எனக்குப் பிடிக்கும்..
அழகுக்காக அல்ல
பாம்பைக் கொத்தும் அலகுக்காக.

– வல்லம் தாஜுபால் –

**மே 2017**
**சந்தா / வளர்ச்சி நிதி வரவுகள்**



| | | |
|---|---|---|
| 1. G. லட்சுமணன் | அறந்தாங்கி | ரூ.100 |
| 2. V. சகாயராஜா | திண்டுக்கல் | ரூ.100 |
| 3. தோழர்.ஜோதிமதி | நாமக்கல் | ரூ.100 |
| 4.S. வெங்கடேஷன் | மதுரை | ரூ.100 |
| 5.கொ. பொன்னிருள் | சிவகங்கை | ரூ.100 |
| 6.K.P.சேகர் | சிவகங்கை | ரூ.200 |
| 7.பாவலர். கருமலைத்தமிழாழன் | ஓசூர் | ரூ.500 |
| 8.புலவர். ந. ஞானசேகரன் | திருலோக்கி | ரூ.100 |
| 9.த. அனந்தராமன் | திருச்சி | ரூ.100 |

# ஜான்சிராணியின் குதிரை



" இதோ
இந்தச் சுவரைத் தாண்டித்தான்
தன் வளர்ப்பு மகனோடு
குதிரையில் தப்பிச் சென்று
மீண்டும் படையெடுத்து வென்று
கோட்டையைக் கைப்பற்றினார்
லட்சுமிபாயென "
யோகேந்திர யாதவ் கூறிய பொழுது
வெய்யில் ஏறியிருந்தது,
மஞ்சள் அரளிப் பூக்கள்
கோட்டைச் சுவரில்
சாய்ந்தவாறு பூத்திருந்தன.

சுவரிலேறி பலர்
செல்பி எடுத்தனர்.

இங்குதான்
குதிரைப்படையிருந்தது
இதுதான் ஆயுதக்கிடங்கு
இந்த மைதானத்தில்தான்
லட்சுமிபாய் வாள் பயிற்சி
எடுப்பார்...
இதுதான் லட்சுமிபாய்
உயிர்நீத்த தன்
படைத்தளபதிகளுக்கு
கட்டிய சமாதியென
யோகேந்திர யாதவ் கூறியபொழுது
குரங்கும், அணிலும்
ஒன்றோடொன்று
விளையாடிக் கொண்டிருந்தன
மைதானத்தில்...

தொலை தூரத்தில்
இங்கிலாந்துக்காரன்
குளிர்பானக் கம்பெனிக்காக
போட்ட ஆழ்துளைக்கிணறு
உறுமிக் கொண்டிருந்தது.

" ஜான்சியைத் தரமாட்டேன் "
எனப் போரிட்ட லட்சுமிபாய்
குதிரையில் ஜான்சிராணியாய்
வாளெடுத்து நின்றிருந்தார்
சிலையாக..

- தேவராஜ் விட்டலன் -





சிற்சில பேருந்துகளில் இவை போன்ற பிரசுரங்கள் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ஒட்டப்பட்டு உள்ளன. அப்படி ஒட்டப்பட்டுள்ள பேருந்தினைப் பார்க்கும் போது, அது அனைத்து மக்களும் பயணஞ் செய்யும் பேருந்தா அல்லது ஓர் குறித்த மதம் பரப்பும் வேலையைச் செய்து கொண்டுள்ள மதம் சம்பந்தமான பிரச்சார வாகனமா என்றுங்கூட சந்தேகம் வருகிறது. கடவுளின் மீதும் மதத்தின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக இது போன்ற பிரசுரங்களை ஒட்ட அனுமதி அளிக்கும் பெரும்பாலான ஓட்டுனர்களும், நடத்துனர்களும் இதன் பின்னால் உள்ள மிகப் பரந்துபட்ட திட்டத்தினை அறிந்திருக்க வாய்ப்பில்லை. இந்தப் பிரசுரங் களில் உள்ளவை எந்த அளவிற்கு உண்மை தன்மை வாய்ந்தன என எத்தனை பேர் சிந்தித்திருப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சிந்திக்க நேரமின்றி பொருளீட்டுவதிலேயே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தும் இன்றைய பெரும்பாலான சமூகவாசிகள் இதைப் பற்றி அறிய வாய்ப்பில்லை.

கடவுள் உருவப்படத்துடனும் மகத்தான மந்திரங்கள் என்ற பெயரில் மந்திரங்களைத் தாங்கியுள்ள இதுபோன்ற பிரசுரங்களை அகற்ற பெரும் பாலானவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இவர்களுள் படித்தவர்களும் அடக்கம். இவர்கள் மனத்தில் கடவுள் மீதுள்ள பயம் கலந்த மரியாதை ரீதியிலான நம்பிக்கையும் பகுத்தறிவற்ற தன்மையும், அவ்வகையிலான வளர்ப்பும், சூழலும் கூட அதற்குக் காரணம்.

இன்றைய நிலையில் அறிவியல் வேண்டுமாயின் பல வகையில் வளர்ந்துள்ளது. அறிவியல் கருவிகளை அதிகம் பயன்படுத்தும் நம்மவர்கள் அக்கருவி எப்படி கண்டுபிடிக்கப்பட்டது அதற்கான சூழல் எப்படி வாய்த்தது என்பது பற்றியும் அறிவியல் பூர்வமான சிந்தனைகளை வளர்த்தெடுக்காத காரணத்தால் தான் மாய்மாலம் பொருந்திய கருத்துக்கள் மக்களை ஆட்சி செய்த வண்ணம் உள்ளன. இன்றைய சூழலில் மதச்சார்பற்ற நமதரசாங்கம் மத சம்பந்தப்பட்ட பிரசுரங்களை பேருந்துகளில் தடைவிதிப்பதுடன், இளஞ் சிறார்களிடம் அறிவியல் பூர்வமான சிந்தனைகளை ஏற்படுத்தும் வகையில் பள்ளிகளில் பல திட்டங்களை வகுத்து செயற்படுத்திட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் சிந்தனையும், தெளிவும் மிக்க வருங்கால சமூகத்தினை நம்மால் உருவாக்கிட இயலும்.

✸


## ஹைக்கூ..

**மா**றும் ஆட்சி
மாறும் காட்சி
மாறாத வறுமை.

✸

**வா**ஸ்து பார்த்து
கட்டிய வீடு
பத்திரம் வங்கியில்.

- கவிஞர். சுந்தரபழனியப்பன் -

## நடமாடும் மதப் பிரச்சார வாகனங்கள்...

– கார்த்திக் . ப –

**நீ**ங்கள் பேருந்துகளிலும், ரெயில் வண்டிகளிலும் பயணஞ்செய்யும் போது அதில் பற்பல விளம்பரங்கள் செய்யப்பட்டு உள்ளதைப் பார்த்திருப்பீர் கள். பொதுவாக விளம்பரங்களில் பல வகை உண்டு. அதில் சிறு, குறு பிரச்சாரங்களும், பிரசுரங்களும் அடங்கும். இந்த சிறு பிரசுரங்கள் யாவும் 4 அல்லது 5 வரிகளில் தாங்கள் கூற வந்துள்ள கருத்துக்களை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து இருக்கும். இதிலிடம் பெற்றுள்ள எழுத்துக்கள் பெரும் பாலும் கொட்டை, கொட்டையாக பெரிய அளவில் 2 அல்லது 3 வண்ணத் தில் இருக்கும். இந்தப் பிரசுரங்களில் பலவகையான நவீன வடிவமைப்புகளும் கூட காணப்படுகின்றன.

முன்பிருந்தே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இது போன்ற துண்டுப் பிரசுரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், முதலிலவை பொருட்களை விளம்பரப்படுத்துவதற்குத் தான் அதிகம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் மிகச் சமீபகாலமாக இவைகள் மதஞ்சார்ந்த செயல்களிற்காக அதிகம் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. ரெயில்களிலும், பேருந்துகளிலும் கூட இது போன்றன தான் அதிகம் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை பெரும்பான்மை மதஞ்சார்ந் ததாகவும், அதன் கூறுகளை உள்ளடக்கியதாகவுமே உள்ளன. சிறுபான்மை மதஞ்சார்ந்த பிரசுரங்களும் ஒட்டப்பட்டுள்ளன என்றாலும் அவை அதிகமாக இல்லை.

இப்படிக் காணப்படும் பிரசுரங்களில் நடைமுறை வாழ்வில் மிக உயர்ந்த தன்மையுடன் மதிக்கப்படும் பழக்கங்கள் யாவும் மதத்துடனும், மதக் கருத்துக்களுடனும் அல்லது கடவுளுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அதுவுமின்றி நடைமுறை வாழ்விற்கு முற்றிலும் பொருந்தியிராத பல ஆதாரமற்ற கட்டுக் கதைகளும், புனைவுகளும், பொய்யுரைகளும் அவற்றில் இடம் பெற்றுள்ளன. இவை யாவும் பொய்ப்பதங்களை உட்கூறுகளாகவும், கவர்ந்திழுக்கும் சொற்பதங்களை வெளியிலும் கொண்டுள்ளன. ஆகவே சாதாரணமான எவ்விதமான ஆழ்ந்தறிவும் இல்லாத ஒருவன் அதனைப் பார்க்கும் போது அதில் மிக எளிதில் மயங்கிவிடுகிறான். தங்களின் கருத்துக்கள் அதிகம் பேரை சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலிதை ஒட்டியுள்ளவர்களின் நோக்கமும் இதனால் மிக எளிதில் ஈடேறிவிடுகிறது. இந்தப் பிரசுரங்கள் சில சமயம் திருக்குறளினை மறைக்கும் வகையிற் கூட ஒட்டப்படுகின்றன. அனைவரும் அறிந்திட வேண்டும் என்ற நோக்கில் ஒட்டப்பட்டுள்ள குறளின் மீது இவை ஒட்டப்படுவது உண்மையில் ஏற்கத்தக்க தன்று. ஓர் குறித்த மதவாத அமைப்பில் பிரசுரிக்கப்பட்டு ஒட்டப்படும் பிரசுரங்கள் குறளை அறவே வெறுப்பன. குறளினை மக்களிடமிருந்து விலக்கி விட வேண்டும் என்றும் எண்ணமுடையன.





## மாவீரன் பகத்சிங்..!

**பு**யலின் சீற்றம், பூகம்பத்தின் அதிர்வு..!
சிங்கத்தின் கர்ஜனை, சங்கொலி முழக்கம்.!

ஓயாத போராட்டம்,ஓய்வில்லா சிறைவாசம்
எழுச்சியின் வடிவம், புரட்சியின் சின்னம்..!

இவன் மாமன்றத்தையே
அதிர வைத்த மகா புருஷன்..
மனித நேயம் காத்து நின்ற மாவீரன்.
நாத்திகம் பேசுகின்ற நல்லாசிரியன்
பொதுமைச் சமூகம் வேண்டிய போர்வாள்.!

மண்டியிட்டுப் பெறுவது விடுதலையல்ல
வென்று முடிப்பதே நம் எல்லையென
வீர உரையாற்றிய வெற்றித் திருமகன்..!

அன்னியனிடம் மன்னிப்பா..! அது வெட்கம்.
மானம் காக்க வீரம் சாட்டி
மடிவதே மேல் என உரக்கப் பேசி
இன்னுயிரை ஈத்த ஈடில்லா தலைவன்..!

நாட்டையே உலுக்கிய லஜபதிராய்
படுகொலை கண்டு
கோட்டைவிடாமல் கொதித்தெழுந்து
துப்பாக்கி முனையில்
எதிர்வினையாற்றிய ஏற்றமிகு தோழன்..!

இவன் இந்துஸ்தான் குடியரசின்
இளைய திலகம்
தாய் மண்ணிற்கு தன்னையே
அர்ப்பணித்த அடலேறு..!
இந்தியத் திருநாட்டின்
இணையில்லா சொத்து..!
சுதந்திர வரலாற்றின் ஆழ்கடல் முத்து..!
பகத்சிங் என்றொரு மானுடம் கண்டு
பார்போற்றும் நின்புகழ்
மகத்துவம் கொண்டு..!

– கவிமுகில் பெ. அறிவுடைநம்பி –

## இளைஞனே..!

**து**ஷ்யந்த
மயக்கங்களை மாய்த்து
தன்னம்பிக்கையால்
தயக்கங்களைத் தகர்த்து
இயக்கங்களாகி
இமயத்தை உருவாக்கு..!

இலட்சியக் கனவுகளை
கருவாக்கி
கவனம் கலையாமல்
தவமாக்கி
கடல் அலையாய் ஓயாமல்
கலங்கரை விளக்கமாய்
ஒளி வீசு..!

பரமபத சோபன படத்தில்
சோம்பல் பாம்புகள்
வீழ்த்தினால் என்ன..?
ஏக்கத்தைப் போக்கி
எழுச்சிமிகு
ஏற்றம் தரும் ஏணிகள்
ஏராளம்..!

சுறு சுறுப்பு நெருப்பில்
நாடி நரம்புகளை சூடேற்றி
திட்டவட்டப் பாதைகளில்
தீர்மானமாய் நடைபோடு..!

திசைகளை உருவாக்கி
மன்மத மாயைகளை
வீழ்த்து..!
அப்போதுதான்
வெற்றியின் வித்துகள்
வசந்தத்தின் வயல்களில்
விருட்சமாகும்..!

– கவிஞர் த. அனந்தராமன் –



- சிறுகதை -

# ப(ா)டம்

- கலவை சண்முகம் -

**பா**ர்வதி என்ற பெயரைச் சுருக்கித் தன் மனைவியைப் பாரு பாரு என்றுதான் அழைப்பார் ஈஸ்வரமூர்த்தி. “அப்படி என்னதான் உங்க முகத்தில் பொக்கிஷமா கொட்டிக் கிடக்குதுன்னு என்னை இப்படி அடிக்கடி பாரு பாருன்னு பார்க்கச் சொல்றீங்களோ எனக்குத் தெரியலே ” என்று அலுத்துக் கொள்வாள் பார்வதி.

நான் பாருன்னு சொன்னது உன்னையில்லே. உன் மருமக தெருவுல நின்னு ஏன் இப்படிக் கத்திக் கொண்டிருக்கா பாருன்னு சொன்னேன்.

அதைத்தான் பாருன்னு சொன்னியேளா..? அது வேறு ஒன்னுமில்லே... நேத்து வெண்டைக்காய ஒரே முத்தலாப் பாத்துக் கொடுத்துட்டுப் போயிட்டாளாம் காய்கறி விக்கிறவ. அதை மாத்திக் குடுன்னு கேட்டுண்டிருக்கா...

ஏன் நேத்தே வாங்கறச்சே ஒடிச்சிப்பாத்து வாங்க வேண்டியதுதானே..?

முனையை ஒடிச்சிப் பாத்துதான் வாங்கணும்னு அவளுக்குத் தெரியாதா என்ன..? வேலையா இருக்கேன் நீயே பாத்து வச்சுட்டுப் போன்னு நம்பிக்கை யோட இவ சொல்லியிருக்கா... ஆனா அவ அந்த நம்பிக்கைய காப்பாத்தலையே..

தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கிற கதையா இல்லே இது இருக்கு..?

நீங்க வாயை மூடிக்கிட்டு பேசாம இருங்க... இதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம். மூக்க நீட்டாதீங்க. நாங்க பாத்துப்போம்.

ஈஸ்வரமூர்த்தி அடங்கிப் போனார். முனையை ஒடித்து வாங்க இப்போ தெல்லாம் வெண்டைக்காய்க்கு மூக்கு எங்கே இருக்கிறது..? இருந்தால்தானே பார்த்து வாங்க முடியும். நமக்கு முன் எல்லா மூக்கையுந்தான் உடைத்து விடுகிறார்களே... அடுத்தவருக்கு வேலை வைக்க வேண்டாம் என்று.

சரி.. சரி வெண்டைக்காயை மாத்தி வாங்கியாச்சா..?

மருமகளா கொக்கா.. . வாங்காம விடுவாளா..? என்ன கத்தறேள்..





## இனிய தகவல்கள்..

### முனைவர் பட்ட ஆய்வு

**பொ**ள்ளாச்சி மகாலிங்கம் கல்லூரி மாணவர் திரு.சா. சதீஸ்குமார் அவர்கள், முனைவர் பட்ட ஆய்வுக்காக கவிஞர். கருமலைப்பழம் நீ அவர்களின் **கடுகுக்குள் கடல்** அய்க்கூ தொகுப்பு நூலை ஆய்வு செய்துள்ளார்.

### புதிய நூல் வெளியீடு

**நூ**லகத்தால் வளர்ந்தேன் என்னும் தலைப்பில் முன்னாள் நூலகர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் எழுதிய தன் வரலாறு ஓராயிரம் பக்கங்களில் வெளிவர இருக்கிறது.

எழுபத்தைந்து அகவை நிரம்பிய அவர் தம் வாழ்நாளில் சந்தித்த பலநூறு அறிஞர்களைப் பதிவு செய்துள்ளார். இந்நூல் ஒரு குட்டி இலக்கிய வரலாறு எனலாம்.

இந்நூலின் வெளியீட்டு முன் பதிவுத் திட்டத்தில் பங்குபெற விரும்பு வோர் ஒரு நூலுக்குத் தரும் குறைந்த விலையாக உரு. ஐந்நூறு **வசந்தா பதிப்பகம்** பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம். நூல் விரைவில் வெளிவரும். வந்ததும் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புக்கு

முனைவர் மோ. பாட்டழகன்
வசந்தா பதிப்பகம்
26, குறுக்குத் தெரு, சோசப்புக் குடியிருப்பு
ஆதம்பாக்கம், சென்னை - 600 088
044 - 22530954, 22533667,
9380417307

### இலக்கியப் பரிசளிப்புத் திட்டம்.

**ஒ**வ்வொரு ஆண்டும் தமிழில் வெளிவரும் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் நூல்களில், ஒவ்வொரு வகையிலும் சிறந்த மூன்று நூல்களுக்கு தலா ரூ.2000 பரிசு வழங்கும் திட்டம் பயணம் பதிப்பகம் மூலம் செயல் படுத்தப்பட உள்ளது.

இப்பரிசளிப்புத் திட்டத்திற்கு நிதி உதவி செய்ய ஆர்வமுள்ளவர்களைப் பயணம் பதிப்பகம் வரவேற்கிறது.

இவர் சிறுவயதில் தனது வீட்டில் உணவில் ஏதேனும் சிறு கல்லோ, கறுப்பான பொருள்களோ இருந்தால் உணவு தட்டோடு பறக்குமாம். அப்படிப்பட்ட மனிதர் தனது சிறை வாழ்வில் அவருக்கு 'சி' கிளாஸ் கொடுக்கப்பட்டு, உணவாக மக்கிப் போன அரிசி கஞ்சி ( அதில் புழு, பூச்சிகளும் மிதக்குமாம் ) கொடுக்கப்படுமாம். அதையும் முகம் சுளிக்காமல் சாப்பிடுவாராம்.

என்ன நெஞ்சுரம், எத்தனை எத்தனை தியாக வடுக்கள். உழைக்கும் வர்க்கத்தின் உடைந்து போன உள்ளங்களையும், கூனிக் குறுகிய முதுகெலும்பையும் நிமிரச் செய்து வானதிர தங்களின் உரிமைகளுக்காக போராட வைத்த பெருமகனார் B.S.R.

அந்தப் பொதுவுடைமைப் போராளியைப்பற்றி எழுத பக்கங்கள் போதாது. வரலாற்றுச் சுவடுகளில் எழுதி எழுதி பதிவு செய்து கொண்டே போகலாம். ஆம் நம் இதயத்திலும் கூடத்தான்.

## அன்பின் ரகசியம்..

**கா**ரியம் சாதிப்பதற்கான
சரிக்கட்டல் என்றார்
மேலதிகாரி.

வேலை வாங்கிட
பசப்புவதாகச் சொன்னான்
பணியாளன்.

காமம் தீர்க்க
சுற்றி வளைப்பதாக
காதலி சொன்னாள்.

முதுமையில் தயவு வேண்டி
நடக்கும் நாடகமென்றன
பிள்ளைகள்.

எல்லோரையும்
நனைத்துக் கழுவும்
இந்த மழை அறிந்துள்ள
அன்பின் ரகசியம்
நாமறிவதெப்போது..?

– ஜே. ஷாஜகான் –

## சின்னச் சின்ன சிந்தனைகள்..

**ஓ**ட்டுக்குப் பணம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் எனத் தேர்தல் ஆணையம் சொல்லுவதெல்லாம் சரிதான்..!
நமது கேள்வியெல்லாம்,
ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் நிலையில் ஒருவரையும்,
பணம் வாங்கும் நிலையில் லட்சக்கணக்கான மக்களையும்
உருவாக்கியிருக்கும் இந்தச் சமூக அமைப்பு சரியானதுதானா..?
என்பதுதான்.

**ஒ**ரு மனிதனிடம் உழைக்காமல் பொருளும் பணமும் குவிகிறது எனில், அப்பொருளுக்கும் பணத்திற்கும் வேறு பலர் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

– கார்க்கிப் பிரியன் –





காபியா..? கவர்பால் கெட்டுப் போச்சி. உங்க பேரங்கிட்டே கொடுத்தனுப்பி யிருக்கா. தெனம் தெனம் இப்படி ஒரு கவர் ரெண்டு கவருனு கெட்டுப் போனா அந்த தெண்டம் யாருக்குன்னு கேட்டுட்டு வரச் சொல்லியிருக்கா கடைக்காரன்கிட்டே... உங்க பேரன் போயிருக்கான்.. வந்தாத்தான் ஒங்களுக்கு காபி..

ஆமா இன்னிக்கி ஞாயித்துக் கிழமைதானே..? எப்படியும் எழுந்திருக்க காலையில ஒன்பதரை ஆயிடுமே. இன்னிக்கி என்ன என்னிக்கியும் இல்லாம ஏழு மணிக்கே எழுந்து ஒரே களேபரமா இருக்கு..

இதெல்லாம் உங்களுக்குத் தேவையா.? காபி குடிச்சோமா.. மாடிக்குப் போயி பேப்பர் படிச்சோமா.. டிபன் சாப்பிட்டோமா.. டி.வி. பார்த்தோமா... ஒரு குட்டித் தூக்கம் போட்டோமான்னு இல்லாம ஏன் இப்படி கிராஸ் கொஸ்டினெல்லாம் கேட்டுக்கிட்டு..

பார்வதி அதிரடியாகப் பேசிவிட்டு அடுக்களையில் நுழைய பேரன் புதிய பால்கவருடன் வந்தான். தாத்தா கேட்டார் கடைக்காரன் மாற்றிக் கொடுத்தானா என்று சிரித்தபடி.

விடுவேனா..? என்ன தாத்தா இதென்ன கேள்வி..? இருபது ரூபாயாச்சே சுளையா..?

சரிடா..! என்ன இன்னிக்கு சீக்கிரமா எழுந்து வேலையெல்லாம் பார்க்கிற மாதிரி தெரியுது... மழை கிழை வரப்போகுது.. பார்த்துடா பார்த்து.

தாத்தா சும்மா என்னைக் கலாய்க்காதீங்க.. அதுக்கு காரணம் இருக்கு. நம்ம தலைவரோட படம். நம்ம வாத்தியாரோட படம். நம்ம தளபதியோட படம். நம்ம சேனாதிபதியோட படம். இன்னிக்குத்தான் ரிலீஸ். முதல் நாள் முதல் ஷோ கிளம்பப் போறோம்..

– கிளம்பப் போறோம்னா என்னடா அர்த்தம்..?

– நாம எல்லாரும்தான் தாத்தா..! நீங்க, பாட்டி, அம்மா, அப்பா, நான் எல்லாருந்தான்.

– ஐயய்ய..ஆளை விடுடா ராஜா.. எனக்குப் படமும் வேணாம்.. ஒன்னும் வேணாம். அது சரி.. ஒரே நாள்ல இத்தனை பேர் படத்தையும் மொதல் நாள், மொதல் ஷோவா எப்படிப் பார்க்கிறது..?

– ஐயோ தாத்தா.. சரியான டியூப் நீங்க. வாத்தியார், தலைவர், தளபதி, சேனாதிபதின்னு நான் சொன்னது எனக்குப் பிடிச்ச ஒரே நடிகரைத்தான். மானசீகமா அவரையே நான் பல ரூபங்கள்லே பார்க்கிறேன்..!

– ஓஹோ..! கோயிலுக்குப் போகமாட்டே.. சாமி கும்பிடமாட்டே.. குழந்தைக்குப் பால் வாங்கி வரச் சொன்னா வாங்கி வரமாட்டே.. (இன்னிக்கி வாங்கியாந்தது விதி விலக்கு) ஆனா தலைவர் படத்துக்கு மட்டும் பாலாபிஷேகமா பண்ணுவீங்க.. மாலையா போடுவீங்க.. கற்பூரம் ஏத்துவீங்க.. கையெடுத்துக் கும்பிடுவீங்க.. கால்ல விழுவீங்க.. என்னடா இதெல்லாம் கூத்து..?

– தாத்தா ஒனெக்கெல்லாம் இது சுத்தமா புரியாது.. விடுவியா.. சீக்கிரம் எழுந்து சுறுசுறுப்பா கிளம்பற வழியப் பாருங்க. பாட்டியைப் பாரு இந்த வயசுலயும் எப்படி பம்பரமா சுத்துறா.. படத்துக்குக் கூட பட்டுப்புடவை.. என்னமா ஜொலிக்குது.

வெயிலுக்குப் பானைத் தண்ணீர் ஜில்லென்று இருக்குமென்று நேற்று ஒரு பானை வாங்கி வந்தார்கள். அது தண்ணீர் கசிந்து வீடெல்லாம் ஈரமாகிவிட்டது. பாட்டி தெரியாமல் காலை வைக்க சர்ரென்று வழுக்கிக் கொண்டு போய் விழுந்தாள்.. பேரன் அவளை தாங்கிப் பிடித்துக் கொண்டான். தாத்தா பரபரத்தார்.

புதுப்பானை கசியத்தான் செய்யும். ஆனால் இத்தனை கசியாதே என்று எழுந்து போய் பானையை உற்றுப் பார்த்தார். ஒருபக்கம் வீறல் கண்டிருந்தது. மருமகளிடம் கேட்டார். யார் வாங்கி வந்தது என்று. ஒரு பானையைப் பார்த்து ஒழுங்கா வாங்கிவரக்கூட ஒங்க பிள்ளைக்கு சாமர்த்தியம் இருக்கிறதா பாருங்கள் என்று மருமகள் பானையைத் தூக்கிக் கொண்டு பக்கத்திலிருந்த கடைக்கு ஓடினாள். ஓட்டையை தலையில் கட்டிவிட்டாயா..? எங்காத்துக் காரரைப் பார்த்தா உனக்கு எப்படித் தோணுது..? என்று விற்பவளிடம் மல்லுக்கு நின்றாள்.

– அம்மா..! நான் தரச்சே நல்லாத்தான் இருந்தது. வாங்கிட்டுப் போறச்சே எங்கிட்டாச்சும் இடிச்சிருப்பாரு. தட்டித் தட்டிப் பார்த்து வாங்கிட்டுப் போன பானையில் திடு திப்புன்னு எப்படிம்மா விரிசல் வந்திடும்..?

அதெல்லாம் முடியாது என்று அவளிடம் மல்லுக்கட்டி வேறு பானை வாங்கி வந்த மருமகளை மாமனார் ஏற இறங்கப் பார்த்தார். பானை பிடித்தவள் பாக்கியசாலி என்றபடி.

எல்லாரையும் சீக்கிரம் தயாராகுங்கள் என்று விரட்டிக்கொண்டே இருந்தான் ஈஸ்வரமூர்த்தியின் பேரன்.

– என்னடா கண்ணா இன்னிக்குத்தான் படம் ரிலீஸ்ங்கிறே.. கூட்டமா இருக்குமேடா.. டிக்கெட் கிடைக்குமா..? எல்லோரையும் கூட்டிக்கிட்டுப் போய் இந்த வெயில்ல கஷ்டப்படுத்தணுமா..?





பார்க்கலாம். போலீசும், ஒளிந்து நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மிராசுதாரர் கூட்டமும் கதி கலங்கிப் போயின.

1942 – லிருந்து 1962–வரை தஞ்சை மண்ணில் விவசாய தோழர்களின் நலனுக்காக, அவர்களின் விடியலுக்காக அல்லும், பகலும் அவர்களுடன் தன் வாழ்வை பங்கிட்டுக் கொண்டார் B.S.R.

கம்யூனிஸ்ட் கட்சியில் தலைமறைவு வாழ்வு வாழவேண்டிய நிலையில் அவரடைந்த துன்பங்களும், தொல்லைகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒருமுறை வழக்கம் போல் அவர் தலைமறைவு ஆக வேண்டிய சூழல். இரயில் நிலையத்திலிருந்து இவரை தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லும் தோழர் ஏனோ வந்தபாடில்லை. மாற்று ஏற்பாடாக சைக்கிளில் வந்த மற்றொரு தோழர் அவரை பத்திரமாக அழைத்துச் சென்று பத்திரமான இடத்தில் சேர்ப்பதாக வாக்களித்தார். சிறிது தூரம் சென்றபின் மற்றொரு தோழரிடம் இவரை ஒப்படைத்து விட்டு அழைத்துச் செல்லக் கூறினார். குன்றின் மீது ஏறியும், இறங்கியும் சுமார் நாற்பது நிமிட நடை பயணம். காலையிலிருந்து ஒரு கவளம் சோறு வயிற்றுக்கு கிடையாது. பசியும், நடைபயண அலுப்பும், சோர்வும் மனிதரை மேலும் இயங்கவிடுவேனா என்று தடை செய்தது. அழைத்துச் சென்ற தோழர் இவரது பரிதாப நிலையைப் பார்த்து ஓடோடிச் சென்று குளிர்பானமும், வாழைப் பழமும் வாங்கி வந்து பசியாற வைத்திருக்கிறார். சமயங்களில் இவர் தங்கும் இடங்களில் மூட்டைப் பூச்சிகளும், கொசுவின் ரீங்காரமும் வரவேற்று இவரை விடிய விடிய தூங்காமல் செய்துவிடுமாம். சரி.. இதையெல்லாம் சகித்துக் கொண்டு தூங்கலாம் என்று நினைத்தாலோ போலீஸின் தேடல் தொல்லை ஆரம்பித்துவிடும். அவர்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மாற்று பதுங்கும் இடம் தேடி போக வேண்டும். பசி, சோர்வு, தூக்கமின்மை, போலீசின் தொல்லை இவைகளையெல்லாம் சகித்துக் கொண்டு இயக்கப் பணியில்தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் B.S.R.

1932 – ம் ஆண்டு அந்நிய துணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதற்காக இலத்தியால் நொறுக்கப்பட்டு சிறைக்குள் தள்ளப்படுகிறார். அந்த காலகட்டத்தில்தான், தான் சிறந்த அரசியல் அனுபவம் பெற வாய்ப்பு கிடைத்தது என மகிழ்வுடன் கூறுகிறார். அந்த காலகட்டத்தில்தான் நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ், முகுந்தலால் சர்க்கார், கம்யூனிஸ்ட் அமீர் ஹைதர்கான் இவர்களின் நெருக்கமும், தோழமையும் கிடைக்கப் பெற்றது.

ஒரு நாள் மாலை தோழர். அமீர் ஹைதர்கான் ஒரு சிறு புத்தக்ததை B.S.R. கையில் கொடுத்து படிக்கக் கூறியிருக்கிறார். அந்தப் புத்தகம்தான் இவரது வாழ்வில் மிகப்பெரிய அரசியல் ஞானத்தை உருவாக்கியதாம். B.S.R. க்குப் புரியாத சில பதங்களுக்கு பொருள் விளங்க வைத்திருக்கிறார் அமீர் ஹைதர்கான்.

விவசாயிகள் வீரத்துடன் தங்களது கோரிக்கைகளை அரசுக்கும், மிராசு தாரர்களுக்கும் செவிப்பறைகள் அதிர கோஷமிட்டனர். அன்றைய பொதுக் கூட்டத்திற்கு தலைமை யார் தெரியுமா..? தோழர் A.M. கோபு தான். அப்போது அவருக்கு வயது வெறும் பதினாறு மட்டுமே.

தோழர் B.S.R. தன் உரையை மழலைத் தமிழில் தொடங்குகிறார். வேற்று மொழியினர் தமிழை உச்சரிக்கும் போது அதில் ஒரு இனிமை கலந்து இரசிக்கத் தோன்றும். கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்டதினால் B.S.R. தமிழ் கொஞ்சம் கொஞ்சும் மொழியானது. இருந்தாலுமென்ன.. அனல் தெறிக்கும் அவரது பேச்சில் வீரம் செறிந்து நின்றது. எரிமலையெனக் குமுறினார். தாய் தன் குட்டிகளைப் பாதுகாக்க பாயுமே அந்த வேகம் அவரது இதயத்தில் இருந்து வந்தது.

“ விவசாயக் கூலிகளுக்கு உடம்பு சரியில்லையென்றால் வேலைக்கு வரத் தாமதமானால் கட்டி வைத்து தோலை உரிப்பீர்கள். இதற்கு உங்கள் கையாட்களான போலீசும், அரசும், அதன் அதிகார வர்க்கமும் துணை. உங்களுக்கு உழைத்துக் கொட்டும் விவசாயிகளின் வயிற்றில் பால் வார்ப்பதற்கு பதிலாக மண்ணையல்லவா வாரிக் கொட்டுகிறீர்கள். நீங்கள் உருப்படவே மாட்டீர்கள் என்று சாபமிட்டார். குடும்பத் தலைவனை போலீஸ் கைது செய்தால் அடுத்து மனைவி, மகன் எனப் போராட்டங்களை ஆரம்பியுங்கள். தமிழ்நாட்டுச் சிறைகளில் தஞ்சை விவசாயிகளை அடைத்து வைக்க இடமில்லை என்ற நிலை உருவாகட்டும். தமிழக விவசாயிகளும், தொழிலாளர்களும் துணைக்கு வருவார்கள். தஞ்சைத் தரணியை வீரத்தின் விளை நிலமாக்குங்கள் ’’ என்று வீரமுழக்கமிடுகிறார்.

அவரது பேச்சு விவசாயிகளின் இதயத்தில் ஆழமாகப் பதிவானது. தங்களின் ஒற்றுமையின் பலத்தை உணர்ந்தனர். தொடர்ந்து…

“ விவசாயித் தோழர்களை கட்டி வைத்து அடிக்கிறார்களே ஜமீன்தார்களும், மேட்டுக்குடி மக்களும் இதை போலீசும், அரசு அதிகாரிகளும் கண்டும் காணாததைப் போல் இருக்கிறீர்களே இதுதான் சட்டத்தின் ஆட்சியா..? அரசும், அமைச்சர்களும் இதைத் தடுக்க முன்வராவிட்டால் நாங்களே விவசாயிகளை அழைத்துச் சென்று பதிலடி கொடுப்போம்..! அதற்காக நீங்கள் எங்கள் மீது என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் ” என்று அரசைப் பார்த்து அச்சமின்றி கேள்வி கேட்கிறார். மறுபடியும் மக்களைப் பார்த்து…

‘‘ மிராசுதாரர்களோ, அவர்களின் அடியாட்களோ உங்கள் மீது கை வைத்தால் நீங்கள் திருப்பி அடிப்பீர்களா..? என்று கேட்டதுதான் தாமதம், மக்கள் கைத்தடிகளை வானத்தை நோக்கி நிமிர்த்தி அடிக்கு அடி கொடுப்போம் ” என்றனரே





– என்ன பாட்டி தாத்தா இப்படி இருக்காரு. நீ எப்படித்தான் இவரை சமாளிக்கிறயோ.. எல்லாம் ஆன் லைன்ல புக் பண்ணிட்டோம்னு சொல்லு பாட்டி. எல்லாமே இப்ப அட்வான்ஸ்தான். நம்ம சீட் ஒரு வாரத்துக்கு முன்பே கன்பார்ம். சும்மா இப்படிக் கேள்விக் கேட்டுண்டே நின்னா அப்புறம் நான் காண்டாயிடுவேன்.

– அது என்னடா எப்பப் பார்த்தாலும் காண்டாயிடுவேன் காண்டா மிருக மாயிடுவேன்னு… மனுஷனாவே நீ இருக்க மாட்டியா..?

– தா…த்…தா… மறுபடியும் என்னைக் கடுப்பேத்தாதே… போ.. போய் சீக்கிரமா ரெடியாகு.. வரமாட்டேன் வரமாட்டேன்னு வம்படிக்காதே..

– டேய் விடுவியா.. அவர்தான் வரமாட்டேங்கிறாரே…விட்டுத்தள்ளு. வந்தா மட்டும் முழுசாப் பார்க்கப் போறாராக்கும். நடுவில நடுவில தூங்கிட்டு கதை என்னாச்சி என்னாச்சின்னு ஒரே அழுவாச்சி பண்ணுவார். அவரும் பார்க்க மாட்டார். நம்மளையும் பார்க்க விடமாட்டார்.

ஈஸ்வர மூர்த்தி பார்வதியைப் பார்த்துச் சிரித்தார். தன் மனைவி தன்னை எவ்வளவு நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறாள் என்று பூரித்துப் போய்.

எல்லோரும் கிளம்பிவிட்டனர். ஈஸ்வரமூர்த்தி ஒரு ச்சேரில் உட்கார்ந்து கொண்டு எதிரிலிருந்த இன்னொரு ச்சேரில் காலை நீட்டியபடி புத்தகம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலே ஃபேன் சுற்றிக் கொண்டிருந்தது. டி.வி. ஓடிக்கொண்டிந்தது. அப்படியே தூங்கிப் போனார். எவ்வளவு நேரம் அப்படித் தூங்கியிருப்பார் என்று அவருக்கே தெரியாது. கீழே விழுந்து கிடந்த புத்தகத்தை மீண்டும் எடுத்துப் புரட்டினார். காய்கறிகளை எப்படி எப்படிப் பார்த்து வாங்க வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள் அதில் இருந்தன.

முருங்கக் காயை முறிக்கிப் பார்த்து வாங்க வேண்டும். மாங்காயைத் தட்டிப் பார்த்து வாங்க வேண்டும். இடைவெளி இல்லாத நெருக்கமாய் இருக்கிற காலிபிளவராப் பார்த்து வாங்க வேண்டும். வெங்காயம் தட்டையாக இருக்க வேண்டும். பளீச்சுன்னு பல்லு வெளியே தெரியிற பூண்டை வாங்க வேண்டும். விரிசல் இல்லாம சௌ சௌ வாங்க வேண்டும். மேலிதழ் வெள்ளையா இருக்கிற வாழைப் பூவா வாங்க வேண்டும். கீறும் போது தோல் ஈசியா வர்ற இஞ்சிய வாங்க வேண்டும். பச்சைப் பசேல்னு இருக்கிற கோவைக்காய் வாங்க வேண்டும் என்று பல குறிப்புகள் இருந்தன அதில்.

காய்றிகள் மட்டுமா..? எதையுமே பார்த்துத்தான் செய்ய வேண்டும் என்று ஈஸ்வரமூர்த்தி கண்களை மூடி அப்படியே சிறிது நேரம் படுத்திருந்தார். காலையில் நடந்த ஒவ்வொன்றும் அவர் மனக்கண்ணில் வரிசை வரிசையாய்

வந்து நின்றன. வெண்டைக்காய் சமாச்சாரம். பால் சமாச்சாரம். பானை சமாச்சாரம் எல்லாம். ஒருநாள் பூக்காரி ஒருத்தியிடம் தன் வீட்டார் சண்டை போட்டதுகூட நினைவிற்கு வந்தது.

பொழுதுபோனா பூவெல்லாம் வாடித்தானே போவும் என்றாள் பூக்காரி.

இல்லே..இல்லே.. இன்னொரு அம்மா கொண்டாந்து தர்ர மல்லிப்பூ அத்தனைச் சீக்கிரத்தில் வாடிப் போறதே இல்லே..

ஈஸ்வரமூர்த்தி இதை நினைத்துச் சிரித்தார். எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துக் கேட்டுக் கேட்டு வாங்குகிற நம் ஜனங்கள் அத்தனைச் சீக்கிரத்தில் நோட்டை எடுத்து நீட்டிவிடுவதில்லையே.. ஒரு முறைக்குப் பத்து முறை அலசி ஆராய்ஞ்சி பார்க்கிறாங்க... புடவை எடுக்கப் போனா எத்தனைப் புடவைகளை எடுத்துக் கடைக்காரன் பிரிச்சுக் காட்டுகிறான். எத்தனை காட்டினாலும் திருப்தி என்பது அத்தனை சீக்கிரத்திலா வந்துவிடுகிறது. நகை வாங்கப் போனால் எத்தனை பார்க்கிறோம். எப்படி எப்படியெல்லாம் பார்க்கிறோம். கேடி எம்மா, நைன் ஒன் சிக்ஸா என்று எத்தனை எத்தனை கேட்கிறோம்.

ஆனால் சினிமா விசயத்தில் அப்படியா..? ஸ்டேடியத்திற்குப் போய் அதிகப் பணம் கொடுத்து டிக்கெட் எடுத்துப் பார்க்கும் கிரிக்கெட் விசயத்தில் அப்படியா..? பணத்தை முன் கூட்டியே வாங்கிவிடுகிறார்கள். எதை நம்பி நாம் பணத்தைக் கொடுக்கிறோம் பார்ப்பதற்கு முன்பே. படம் நன்றாகத்தான் இருக்கும் என்று ஒரு நம்பிக்கை. நம்மாட்கள் விளையாட்டில் வென்று விடுவார்கள் என்ற நம்பிக்கை...

விளம்பரம்.. விளம்பரத்திற்கு மேல் விளம்பரம்... படத்திற்கு பூஜை போடுவதிலிருந்து பாடல் ஒலிப்பதிவிலிருந்து படம் முடிந்து வெளியாவதில் இருந்து ஒரே விளம்பரம்.. பாடல் பிறந்த கதை என்றும், படம் படமான கதை என்றும் பலப்பல விளம்பரம். போய்த்தான் பார்ப்போமே என்று ஆசையை ஏற்படுத்தும் விளம்பரம். ஒரே விளம்பர மயக்கம். முதல் நாளே பார்த்துவிட வேண்டும் என்ற தவிப்பு. நிறைய எதிர்பார்ப்பு. இரண்டு மூன்று தினத்திலேயே வசூல் களைகட்டி விடுகிறது. போட்ட பணம் பல மடங்கு பெருகிவிடுகிறது. அது பிறந்தகதை, இது பிறந்த கதை என்று சொல்லிச் சொல்லியே எல்லோரையும் பறக்க வைக்கிறார்கள். நாம் பிறந்த கதையை மறந்துவிட்டு ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறோம்.

ஈஸ்வரமூர்த்தியின் சிந்தனை நீண்டு கொண்டே போனது. பழைய





தோழர். B.S.R. அவர்கள் மட்டும் தன்னந்தனியாக நின்று கொண்டு வெள்ளை எதிர்ப்பு முழக்கங்களை பிரகாசம் அவர்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து முழங்க ஆரம்பித்தார். சும்மா இருப்பானா வெள்ளையன். முரட்டுத்தனமாக அவரைத் தாக்கி, இரத்த சேற்றில் மிதந்து கொண்டிருந்த அந்த மெலிந்த இளைஞரை செத்துவிட்டதாக எண்ணி சாலையோரம் இழுத்துப் போட்டுவிட்டு மிச்சத்திற்கு பூட்ஸ் காலால் எத்தி விட்டுச் சென்றிருக் கிறார்கள் வெள்ளையர்கள். இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த சாலையோரம் பூ, பழம் விற்கும் ஏழைத் தாய்மார்கள் தோழரை ரிக்ஷாவில் ஏற்றிச் சென்று வைத்தியம் பார்த்து இவரைப் பிழைக்க வைத்திருக்கிறார்கள்.

உடல்நலம் தேறி வெளியே வந்ததும், மீண்டும் இயக்கப் பணிகளில் உற்சாகமுடன் செயல்பட ஆரம்பித்தார்.

கம்யூனிஸ்டுகளின் மீது அரசு வன்முறையை கட்டவிழத்து விட்ட நேரமது. குடியிருப்பதற்கு வீடு கிடைப்பது கூட அரிது. கம்யூனிஸ்டு களுக்கு யாரேனும் வாடகைக்கு வீடு கொடுப்பது தெரிந்தால், வீடு வாடகைக்குக் கொடுத்தவர்கள் கைது செய்யப்படுவார்கள். இதுதான் அப்போதைய சட்டம்.

தோழர் B.S.R.அவர்கள் தெருத் திண்ணைகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திண்ணையாக மாறிப்படுத்து தலைமறைவு வாழ்வினைத் தொடர்ந்தார்.

தமிழ்நாட்டில் தொழிற்சங்க இயக்கம் வளர்ந்து வந்தது. விவசாயப் பெருங்குடி மக்கள் திரட்டப்படாமல் இருந்தார்கள். உழைப்பவர் உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்டால் சாணிப்பாலும், சவுக்கடியும்தான் மிச்சம். உழுது விதைத்து அறுவடை கண்டு மிட்டா மிராசுதாரர்களுக்கு படியளக்கும் விவசாயக் கூலிகளுக்கு கூன் விழுந்து எலும்புக் கூடானதுதான் அவர்கள் கண்ட பலன். இந்த ஆதிக்க வர்க்கததிற்கு அரசு வேறு துணை.

கொதித்துப் போனார் B.S.R. தஞ்சைத் தரணியின் விவசாயிகளை தன் செல்லப்பிள்ளைகளாகத் தத்தெடுத்துக் கொண்டார் அந்த மாணிக்க மனிதர். விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்காக, உரிமைகளுக்காக சிந்திக்கத் தூண்டினார். ஆதிக்கக் காரர்களுக்கு எதிராக தியாக வேள்வியை மூட்டினார்.

விவசாயிகளெல்லாம் ஒன்று திரட்டப்பட்டு ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெறுகிறது. சிவப்புத் துண்டணிந்து பத்தாயிரம் விவசாயி கள் தாரை, தப்பட்டை, செங்கொடி சகிதம் கட்டுச் சோற்று மூட்டையும், வெற்றிலை பாக்குமாகப் புறப்பட்டனர். அவர்களால் உருவாக்கப்பட்ட மூங்கில் கழிகளை செதுக்கி உருவங்கொடுத்து ஆளுக் கொரு கம்புகளையும் கையில் ஏந்திக் கொண்டனர். உழைத்துக் களைத்து கூன் விழுந்த முதுகுகள் கூட அவர்களின் கைக் கம்புகள் போல் நிமிர்ந்து நின்றன.

# பொதுவுடைமைப் போராளிகள் ②

## தோழர். பி.ஸ்ரீனிவாசராவ்

– கரிசல்குளம் ஜோதிமதி –
7373576490

**க**ர்நாடகா மாநிலம் படகாரா என்னும் கிராமத்தில் ஆச்சாரம்மிக்க ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர் தோழர். பி.ஸ்ரீனிவாசராவ். பள்ளிப் படிப்பை முடித்து இண்டர் மீடியேட் படித்த சுதந்திரப் போராட்ட கால கட்டத்தில் உப்பு சத்யாக்கிரக பிரச்சாரத்தில் ஈர்க்கபட்டு படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு பொது வாழ்வில் ஆர்வமுடன் அடியெடுத்து வைத்தவர் தோழர். B.S.R.

" அக்காலத்தில் சுயராஜ்யம் எனும் சொல் எல்லா இளைஞர் களையும் தியாக அக்னியில் குதிக்கும்படி ஆவேசம் ஊட்டும் ஒரு மந்திர சக்தியை போல் மக்களை தட்டி எழுப்பும். தாய், சகோதரன், உற்றார், உறவினர், நண்பர் படிப்பு எல்லாவற்றையும் உதறித் தள்ளி விடும். என்னையும் எல்லாவற்றை யும் உதறித்தள்ளிவிட்டு கல்லூரியிலிருந்து வெளியேறி ஒத்துழையாமை இயக்கத்தில் குதிக்கும்படி செய்தது " என்று ஸ்ரீனிவாசராவ் அவர்கள் தன் நினைவுகளை பதிவு செய்திருக்கிறார்.

அப்படி தேசிய இயக்கத்தில் சேர்ந்ததற்காக பெற்றோர்களால் வீட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டு சொல்லொண்ணா கஷ்டங்களை அனுபவித்தும் இருக்கிறார்.

காங்கிரஸ்வாதியாக பொது வாழ்வில் ஈடுபட்டு பின் நாட்களில் உழைக்கும் வர்க்கத்தின் மாபெரும் தலைவராக கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றினார். மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக செயல்படும் இவரது இயல்பான பண்புதான் அசாத்தியத் துணிச்சலுடன் விவசாயப் பெருங்குடி மக்களுக்காகவும், தொழிலாளி வர்க்கத்திற்காகவும் இவரைப் போராட வைத்தது.

சுதந்திரப் போராட்ட காலங்களில் சிறைத் தண்டனை பெற்றிருக் கிறார்.

1930 –ம் வருடம் அந்நியத் துணி பகிஷ்கரிப்பிற்காக போராட்டம் நடத்த அணிவகுத்து வந்த மக்களின் கூட்டத்தில் பிரிட்டிஷ் போலீஸ் வேட்டை நாய்களைப் போல் துப்பாக்கியுடன் பாய்ந்தது. ஆந்திர கேசரி பிரகாசம் எனும் சுதந்திரப் போராட்டத் தலைவர், வெள்ளை காவல் படைகளின் அதிகாரிகள் முன், தான் அணிந்திருந்த சட்டை, பனியன்களை கழற்றி வீசி எறிந்து விட்டு நெஞ்சைத் திறந்து காட்டி நின்றவண்ணம் சவால் விட்டார். அவரைச் சுடாமல் தடி கொண்டு நொறுக்கி வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு போயினர். கூட்டமோ கலையத் தொடங்கியது.





படங்கள் பல அவர் கண்முன் வந்து வந்து நின்றன. அந்தக் காலத்தில் பார்த்த எத்தனையோ படங்கள் இன்னும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதானே இருக்கின்றன. பார்க்கும் போதே பார்த்தது மறந்துவிடுகிறது. வெளியில் வரும்போது சுத்தமாக எல்லாமே மறந்து போகிறது. இது இன்றைய நிலை.

ஒரு வழியாக படத்திற்குப் போனவர்கள் திரும்பிவிட்டனர். போகும் போது இருந்த துள்ளலும் துடிப்பும் கொஞ்சமும் அவர்கள் யாரிடமும் காணப்படவில்லை.

– என்னடா படம் ஜோரா இருந்துச்சா..? தலைவர் என்ன சொன்னார்.?

– கடுப்பேத்தாதீங்க தாத்தா

மருமகள் சொன்னாள். ரெண்டாயிரம் தெண்டம் என்று.

இதிலே இவனோட பிரண்டு வேறே திடீர்னு வந்துட்டான். அவனுக்கு வேறே பிளாக்குல டிக்கெட் எடுக்கும்படி ஆயிடுத்து. மொத்தத்தில் ரெண்டாயிரத்து ஐநூறு தெண்டம் அழணும்னு விதியோ என்னவோ..? என்று பார்வதி புலம்பினாள்.

கால் கிலோ ஸ்வீட் வாங்கவே அதில் கொஞ்சம், இதில் கொஞ்சம் சேம்பிள் வாங்கிச் சாப்பிட்டு பார்க்கிறோம். படம் என்ன ஸ்வீட் வாங்குறதுன்னு நெனைக்கிறீர்களா...? தட்டிப் பாக்கவும், கிள்ளிப் பார்க்கவும், நசுக்கிப் பார்க்கவும் படம் என்ன காய்கறியா – கிள்ளுக் கீரையா..? விட்டுத் தள்ளுங்க போய்ச் சாப்பிடுங்க.. வெண்டைக்காயை மாத்த முடிஞ்சது.. பானைய மாத்த முடிஞ்சது.. பால் கவரை மாத்த முடிஞ்சது.. உங்க ஏமாற்றத்தை மாத்த முடியுமா இனிமே..? பல்லி வாயில் போன ஈ மாதிரி. போனது போனதுதான். தலையெழுத்து தலையெழுத்துன்னு சொல்லுவாங்களே இதுதான் இன்னிக்கி உங்களோட தலையெழுத்து போலிருக்கு.. போங்க போங்க.. என்றார் ஈஸ்வரமூர்த்தி.

படம்..? நல்ல பாடம்..!

**ஹைக்கூ...**

**உ**ண்டியில் விழுந்த காசு
சப்தம் எழுப்பியது
பசித்த வயிற்றுக்குள்..!

**க**ம்பீரமாய் நின்று சிரித்தன
மேலடுக்குக் கற்கள்
அடிக்கற்கள் மேல் நின்று..!

- பாவலர் கருமலைப்பழம் நீ -




# பயணம் குறித்த பார்வைகள்

பயணம் மார்ச் இதழில் “ சனநாயகம் ” கட்டுரை படித்தேன். அது வார்த்தைகளின் கூட்டுக் கலவை. கட்டுரையல்ல. இயலாதவரின் வெற்றுப் புலம்பல். தலைப்பை மறந்து எதை எதையோ குறிப்பிட்டு முடிவு அறியாத வகையில் கையாலா காதவரின் முணு முணுப்பு. எத்தனையோ கருத்துக்கள், செய்திகள் நிரம்பிக் கிடக்கும் இவ்வுலகத்தில் சனநாயகம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல், என்னதான் சொல்லப்படுகிறது என்பதும் புரியாமல் இன உணர்வு உள்ளுக்குள் இருக்கும் விஷச்சத்தை வெளியிட்டு உள்ளது.

சுரண்டல், பதுக்கல் இவை காலகாலமாய் ஒவ்வொரு மனிதனின் மனங்களில் ஆழப்பதிந்துள்ளது. முதலாளி வர்க்கம் உலகம் தோன்றியவுடன் உருவானதல்ல..? நம்மைச் சுற்றி நடக்கின்ற காட்சிகள், வாழ்க்கைகள் திட்டமிடல் இல்லாத வாழ்வு நலிந்துதான் போகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் முதலாளிதான்.

கையாலாகாதவரின் குடிகாரன் கதை சொல்லி மக்களை முட்டா ளாக்க வேண்டாம். புரட்சியாளனை வம்புக்கிழுத்து உன் முகத்தில் செருப்பால் அடித்துக் கொள்ளாத பயணம் இதழ் தற்போது இது போன்ற வார்த்தைக் கலவையால் பொழிவை இழக்கிறது. அடி மனதில் உள்ள சாதி விஷத்தை வெளிக்கொணர்கிறது. இது கட்டுரையல்ல நச்சு விதை.

Dr. K. காளிராசன் – பள்ளப்பட்டி.


பயணம் மார்ச் இதழ் படித்தேன். அரசியல் கலவாது இளைஞர் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என நிதர்சனப்படுத்திய மெரினா போராட்டம் பாரட்டுக்குரியது. கற்பனையும், பொய்யும் கலந்த திரைப்படம் மக்களுக்கு கலையாக இருந்து மகிழ்வூட்ட வேண்டுமே தவிர மக்கள் மனதைக் கலைத்துக் கெடுப்பதாக இருக்கக் கூடாது என்னும் திலகவதியாரின் கருத்தை வரவேற்கிறேன். சனநாயகம் பற்றிய செம்மலையாரின் எழுத்தோட்டத்தில் புதையலாய் பல கருத்துக்கள் பளிச் சிட்டன. மகாத்மாவின் மனப்பாங்கு நம்மை முன்னேற விடாது. அது பிற்போக்கானது எனச் சாடியுள்ள பகத்சிங் உண்மையில் துணிவு, கனிவு கொண்ட இனிய மனிதர்தான்.

புலவர் ந. ஞானசேகரன் – திருலோக்கி.

மார்ச் இதழின் முகப்பில் இடம்பெற்ற வல்லம் தாஜ்பாலின் கவிதை இயல்பான உவமைகளுடன் சிறப்பாக இருந்தது. உழைப்பை அபகரிக்கும் உலக அரசியலை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியது ஆசிரியர் உரை. அறிவுடை நம்பியின் இனம் கவிதை இன்றைய நமது இயலாமையை சுட்டிக்








பக்கங்கள் : 112. லை ரூ. 80

## ஒற்று புதினம்

ஆசிரியர் : அண்டோ கால்பட்

இந்த நாவலின் நாயகி மேரியம்மா கதாப்பாத்திரத்தைப் பற்றி வாசிக்கும் போதே ஒரு கம்பீர உணர்வெழுகிறது. இப்படியான ஒரு பெண்மணி வாழ்ந்த காலத்தில் தானும் வாழ்ந்திருக்கக் கூடாதா என்கிற உந்துதலுணர்வு ஒவ்வொரு வாசகனுக்குள்ளும் நிச்சயமாக எழக்கூடும். அதுதான் இந்நாவலின் வெற்றி. – வாசகன் பதிப்பகம்.



பக்கங்கள் : 112.
விலை ரூ. 80.

## ஆறு முகனின் அறுபடை வீடுகள்

( ஆன்மீக வரலாறு )

ஆசிரியர் : மா. கார்த்திகேயன்

அறுபடை வீடுகள் எனும் ஆறு கோவில்களின் பெருமைகளை எடுத்தியம்பியதோடு மட்டுமல்லாமல், முருகன் எனும் அழகனின் அருமைகளை அடுக்கிச் சொல்கிற இந்நூல் ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் இருக்க வேண்டிய நூலாகும். – வாசகன் பதிப்பகம்.




பக்கங்கள் : 112.
விலை ரூ. 90.

## புல்லாங்குழலும்... இருபது துளைகளும்

( கவிதைத் தொகுப்பு )

தொகுப்பாசிரியர்கள் : சீதா – மகிழினி

ஒற்றுமை என்பது மிகப்பெரிய பலம். இந்நூலில் இருபது இலக்கிய இதயங்கள் ஒன்றிணைந்துள்ளமையை மனதாரப் பாராட்ட வேண்டும். இந்த இளம் கவிகளின் இனிய கீதத்தை செவிகுளிரக் கேட்டு, வாழ்த்தி, வழி நடத்தும்படி தமிழ்ச் சமூகத்தை வேண்டி நிற்கிறது வாசகன் பதிப்பகம்.




பக்கங்கள் : 172.
விலை ரூ. 100.

## வான்புகழ் சீர்காழி

(மாநகர் பெருமைகள் பறைசாற்றும் கட்டுரைகள்)

ஆசிரியர் : சீர்காழி உ. செல்வராஜ்

சீர்காழி என்கிற ஊரின் பெருமையைப் பறைசாற்றும் விதமான இருபத்தேழு கட்டுரைகளை நூலாசிரியர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு தொகுத்தளித்துள்ளார். நூலாசிரியர் சீர்காழி உ. செல்வராஜ் அவர்களின் நான்காம் நூலான இம்முயற்சியை வரவேற்க வேண்டுமாய் தமிழ் கூறு நல்லுகை வேண்டு – கிறோம். – வாசகன் பதிப்பகம்.

நான்கு நூல்களும் வெளியீடு : வாசகன் பதிப்பகம்
167, ஏ.வி.ஆர். காம்ப்ளக்ஸ்
செரி ரோடு, சேலம் – 636 007

# நூல்கள் அறிமுகம்..!





## கறுப்பும் வெள்ளையும்

( நாவல் )

ஆசிரியர் : செ. கணேசலிங்கன்

வெளியீடு : குமரன் பப்ளிஷர்ஸ்
12 / 3, மெய்கை விநாயகர் தெரு
வழி : குமரன் காலனி 7 வது தெரு
வடபழனி, சென்னை - 600 026.

பக்கங்கள் : 176. விலை ரூ. 70




## தீயரும்பு

( சிறுகதைத் தொகுப்பு )

ஆசிரியர் : இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

வெளியீடு : அய்யா நிலையம்
10, ஆரோக்கியநகர்
நாஞ்சிக்கோட்டை சாலை
தஞ்சாவூர் - 613 006

பக்கங்கள் : 160. விலை ரூ.150




## மனவாசல்

( கவிதைத் தொகுப்பு )

ஆசிரியர் : கவிஞர் இராசி பூபாலன்

நூல் கிடைக்குமிடம் : **Rani Balan Memorial Trust**
**Poet Rasi Poobalan**
**Plot 6 & 7, Flat 501, Mahakali Niwas.**
**Sector 21, Kamothe, Khandeshwar,**
**Navi Mumbai - 703**

பக்கங்கள் : 132. விலை ரூ.100




## ஒரு பல் ஆடுகிறது

குறும்பா ( ஹைக்கூ )

ஆசிரியர் : முத்தமிழ்க் கவிஞர்
முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

வெளியீடு : பாவாணர் ஏடகம்
புதிய கதவு எண். 26, குறுக்குத் தெரு
சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்
சென்னை - 600 088.

பக்கங்கள் : 136. விலை ரூ. 100





காட்டியது. “ விஞ்ஞான நடைமுறையும் மூட நம்பிக்கையும் ” கட்டுரை மிகச் சிறந்த பார்வையைத் தந்தது. வெளியீட்டாளர் முகவரியும் தந்தால் உதவியாகும்.

தஞ்சை என்.ஜே. கந்தமாறன் - சென்னை 89.

பயணம் மார்ச் 2017 படித்தேன். அட்டையில் உழவன் கவிதை. டெல்லியில் கொளுத்தும் வெயிலில் கோவணத்துடன் தமிழ்நாட்டு உழவர்கள்..! எட்டி கூடப் பார்க்காத பிரதம மந்திரி..! இவர் இந்தியாவில் பெரிய ராஜ தந்திரியாம்..! மதம், மாந்திரீகம் இதை வைத்து வந்துவிட்டார்களே ஆட்சிக்கு..! மனசு வலிக்குது நம் இந்திய மக்களின் அறியாமையை எண்ணி.! அறியாமைதானே இந்த அரசியல்வாதிகளுக்கு மூலதனம்..!

தலை நிமிர வைத்த மெரினா போராட்டம் கடைசியில் வேதனையிலேயே முடிந்தது. கைது செய்யப்பட்டவர்களின் கதி இதுவரை தெரியவில்லையே..! இதில் மக்களுக்கான அரசாம்..! கொடுமையிது...! மக்களின் போராட்டத்தினால் மீத்தேன் கைவிடப்பட்டது. நெடுவாசல் தொடர வேண்டும். இந்த மைய அரசின் பாதிப்பு ஒவ்வொரு வீட்டின் வாசல் வரை அல்ல, வீட்டிற்குள்ளேயே வந்துவிட்டது. விரட்டவில்லையெனில் இன்னும் அடிமைகள்தான்...! எத்தனை ஆண்டுகளுக்கு..?

1934 ல் தோழர் சிங்காரவேலு “ விஞ்ஞான நடைமுறையும் மூட நம்பிக்கையும் ” எழுதியுள்ளார் என்பது எனக்கு செய்தியே. எப்படியும் **N.C.B.H.** லிருந்து வாங்கிப் படித்துவிடுவேன். மிக்க நன்றி. மூடப்பழக்க வழக்கங்களை எப்படிச் சாடுகிறார்...? ஆனால் இந்தச் சாடல் தமிழ் நாட்டில் தொடரவில்லை. எனவேதான் இந்த ஆட்சி, காட்சி மாட்சிகள் எல்லாம்...! மிகவும் வேதனை அளிக்கிறது. மதவாதம், தாராளமயம், கார்ப்பரேட் வசம் என வசமாய் மாட்டிக் கொண்டது நாடு. இதிலிருந்து விடுபட விழிப்புணர்வு பிரச்சாரங்கள், தெரு முனைப் பிரச்சாரங்கள் தேவை எனக் கருதுகிறேன். என்றென்றும் நன்றியுடன்..

ஞா. சிவகாமி - சென்னை.

பயணம் மார்ச் இதழில் திலகவதியின் “ நாமும் நமது சினிமாவும் ” கட்டுரை உண்மையின் உரைகல். ஊடகங்களையும் நாம் எப்போது சரியாகப் பயன்படுத்தப்போகிறோமோ..?

முறையற்ற காதல், முடிவற்ற வன்மம்
இறையினையும் எள்ளும் வசனம் - குறைவாய்
அரையாடை நாகரிகம், பண்பழிப்பென
திரைப்படம் செய்திடும் தீங்கு.

இராஜலட்சுமி - கோவை 6.




# உலக புத்தக நாள்

- ரஞ்சனி பாசு -

1995 ஆம் ஆண்டு UNESCO வினால் வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமை, ஊடக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல் என்பதை முன்னிறுத்தி ஏப்ரல் 23 உலக புத்தக தினம் அனுசரிக்கப்டுகிறது. புத்தகம் எனக்கு என்னவாக இருக்கிறது என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் மனதில் எழுப்பிக் கொள்ளும் தருணமாக இப்புத்தக தினத்தை அணுக வேண்டும் என்று நினைக்கிறேன்.

கடந்த வாரம் வாசிப்பு குறித்து எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவப் பகிர்வோடு துவங்குகிறேன்.

எனது நான்காம் வகுப்பு முடிந்த கோடை விடுமுறையில் அப்பா ஒரு புத்தகம் வாங்கி வந்தார். ரேவதி எழுதிய **" கொடி காட்ட வந்தவன் "**. நவம்பர் 1978 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டது. 1934 ஆம் ஆண்டு நடப்பதான கதை. ஒரு வணிகர். மகனை சுதந்திரப் போராட்டத்தில் இழந்தவர். பேரனை அவ்விசயங்கள் தெரியாமல் வளர்க்கிறார். தற்செயலாய் தாத்தா வீட்டிற்கு வரும்போது அவனுக்கு சமூக நிலைமை, சாதிய பாகுபாடு, சுதந்திரப் போரின் தாக்கம் எல்லாம் புரிகிறது. அவன் மனதில் எழும் கேள்விகள், குற்றாலத்திற்கு காந்தியின் வருகை...இவற்றை வைத்து செல்லும் நாவல்.

நாவலைப் படிக்கும் போது சமூகம் குறித்து ஆயிரம் ஆயிரம் கேள்விகள் நம் மனதில் எழும். அதை ஒரு 1000 முறை குறைந்தது படித்திருப்பேன். அந்தப் புத்தகத்தின் வழி எனக்குள் பல கேள்விகள்... அதற்கான தேடல்கள் தொடர்ந்தது... அதன் பின் அது என் நினைவில் இருந்து போய்விட்டது. கடந்த வாரம் கபடாபுரம் என்ற இணைய இதழில், இப்புத்தகம் பற்றிய மதிப்புரை படித்தேன். வாட்ஸ் ஆப் மூலம் பள்ளித் தோழிகளை 20 ஆண்டுகள் 25 ஆண்டுகள் கழித்து அடைந்த போது ஏற்பட்டதைவிட பன்மடங்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. என் கைகளில் திரும்ப அது கிடைத்து விட்டது.

வாசிப்பு என்ற செயல்பாடு ஏன் இருக்க வேண்டும்..? நமது இயல்பான வளரும் சூழல், வளர்ப்பு முறை, நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் இவற்றை வைத்து நமக்குக் கிடைப்பது விசய ஞானம் (Wisdom) எனலாம். ஞானம் என்பது சரியான சொல்லாட்சி. அந்த ஞானம் விரிவடைந்த





மிகவும் கவர்ந்தன. அதனால்தான் இந்த நூலின் மறுபதிப்பை அவரிடம் ஒப்படைத்தேன்.

அவருடைய கொள்கைப் பிடிப்பும் இலட்சியதாகமும் வியாபாரச் சந்தையில் விலைபோகுமா..? விலை போகும் - போக வேண்டும் - விலை போனால்தான் இப்படிப்பட்ட நல்ல நூல்கள் தொடர்ந்து வாசகர்களுக்குக் கிடைக்கும். இதை மனதில் கொண்டு தமிழ் மக்கள், முற்போக்குச் சிந்தனை யாளர்கள், புரட்சிகரமான எண்ணம் கொண்ட இளைஞர்கள் இந்நூலை விலை கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும் ; மற்றவர்களையும் படிக்கத் தூண்ட வேண்டும். இதுவே என் பணிவான வேண்டுகோள்..!

சென்னை அன்பன்
24-5-1996 சிவலை இளமதி

## சமூகவியல் மொழிகள்..

- கொ. பொன்னிருள் -

**நீ** கற்ற கல்வி கற்றளவில் நிற்பதற்காக அல்ல. சிந்திப்பதற்காக. இயற்கையை ஆய்வு செய். ஆய்வில் கண்ட உண்மைகளை அஞ்சாது உலகிற்கு சொல் கோபர் நிகசு போல.

●

**இ**யற்கையின் அமைதி, தென்றல், புயல், பூகம்பம், பூமியின் சுழற்சி இவைகளைத் தடுத்து நிறுத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ எந்த சக்தியும் இல்லை. இயற்கை, இயற்கை விதிகளின் படி இயங்கிக் கொண்டேதான் இருக்கும். யாகம், பூசை, புனர் தானங்களால் உணவுப் பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகும். யாகப் புகையால் மேகம் தீய்ந்து மழை பொய்க்கும். பஞ்சம், வறுமை, அறிவுப் பஞ்சம் உண்டாகும்.

●

**ஒ**ரு உடல் மண்ணிலிருந்து உருவாகிறது. அவ்வுடல் வாழ்ந்தழிந்து மண்ணாக மாறுகிறது. மண்ணாகி எது எதுவாகவோ மாறுகிறது. எனவே மீண்டும் அதே உடல் எடுப்பதில்லை.

●

**எ**ன்ன காதல்..? உடல் ஆரோக்கியம்தான் காதல் உறவை மேம்படுத்துகிறது. உடல் உறவில் ஆரோக்கியக் குறைவு என்றால் காதல் உறவு அறுந்துவிடும். இதுதானே காதல்..?

●

**எ**ல்லா மனிதர்களும் நல்லவர்களாக இருக்க நல்லவன் நினைக்கிறான். ஆனால் பூமியில் விஷச் செடிகள் முளைப்பது போல மனிதரில் நன்றி கெட்ட அயோக்கியர்களும் முளைத்து விடுகிறார்களே என்ன செய்வது..?

தூக்குமேடை ராஜகோபாலனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘பாரதம்’ ஏட்டிலும், 1967 முதல் 1977 வரை நானே ஆசிரியராக இருந்து நடத்திய ‘பாரதம்’ வார ஏட்டிலும் எழுதியிருக்கிறேன்.

ஆனால் தொடர்ச்சியாக சுமார் 40 வாரங்கள் இந்த வரலாறு வெளிவந்த பத்திரிகை ‘சுதந்திரம்’ வார ஏடு மட்டும்தான்.! என் வாழ் நாள் முடிவதற்குள் இந்தியப் புரட்சி இயக்கத்தின் முழுமையான வரலாற்றை எழுதி முடிக்க வசதியும், வாய்ப்பும் கிடைக்குமா என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தேன். என் அருமை நண்பர் திரு. ஏ.பி. சாமி அவர்களின் துணையும், ஊக்குவிப்பும் அந்த ஏக்கத்தைப் போக்கி எழுதத் தூண்டின.

‘சுதந்திரம்’ வாசகர்கள், குறிப்பாக இளைஞர்களும், கல்லூரி மாணவர் களும் அளித்த வரவேற்பும், பாராட்டும் ‘இந்த நாட்டில் தேசபக்தியும், வீரமும் செத்துவிடவில்லை’ என்பதை நிரூபித்தன..! அதுவே எனக்குப் பெரும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்டிற்று.

அந்த உற்சாகத்தை மேலும் உரமூட்டி வளர்ப்பது போல, எனது நீண்ட நாள் நண்பரும், விடுதலைப் போராட்ட காலத்தில் மாணவர் இயக்கங்களைக் கட்டி வளர்த்த தேசபக்தருமான திரு. ‘மாணவர்’ சுப்பு அவர்கள், இக்கட்டுரைத் தொடரை தம்முடைய ‘முன்னேற்றப் பதிப்பகம்’ சார்பில் நூலாக வெளியிட முன் வந்தார். அதுவரை ‘சுதந்திரம்’ ஏட்டில் இந்நூலின் மூன்றிலொரு பகுதியே வெளிவந்திருந்தது. திரு. சுப்பு அவர்களின் உறுதியும், உற்சாகமும் தான் மீதிப் பகுதிகளை முழுமூச்சாக எழுதி முடிக்க எனக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

தமிழ்நாடு இளைஞர்களுக்கு இந்த நூல், மறைக்கப்பட்ட தேசிய வரலாற்றின் ஒருபகுதியைத் திறந்து காட்டி மங்கிக் கிடக்கும் தேச பக்தியையும், தியாகச் சிந்தனையையும் ஊட்டும் ; வளர்க்கும் என்பது என் பணிவான கருத்து ; திடமான நம்பிக்கை.

சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இந்நூல் வெளிவந்த ஓராண்டு காலத்திலேயே விற்றுத் தீர்ந்துவிட்டது. என்றாலும், இதனைத் திருத்தி மறுபதிப்பாக வெளியிட ஒரு நல்ல பதிப்பாளரை நான் தேடிக் கொண்டிருந்தேன். ‘அலைகள் வெளியீட்டகத்’ தின் உரிமையாளர் அருமை நண்பர் தோழர். சிவம் அவர்களைத் தற்செயலாகச் சந்தித்தேன். முதல் சந்திப்பிலேயே இவர்தான் நம்முடைய நூலின் மறுபதிப்பாளர் என்று முடிவு செய்துவிட்டேன். அவரும் முழு மனதோடு இந்தப் பணியை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட நூல்களையே தேடிப்பிடித்து வெளி யிடும் பிடிவாதமுள்ள இலட்சியப் பதிப்பாளர்களைக் காண்பது மிகவும் அரிது. தோழர். சிவம் அவர்களின் கொள்கைப் பிடிப்பும், இலட்சிய தாகமும் என்னை





மேம்பட்ட நிலைக்குச் செல்வதற்கு நமக்கு அறிவு ( Knowledge ) தேவை. இயல்பாய் பெற்ற ஞானத்திற்கும், அறிவிற்கும் இடையே உள்ள தொலைவைக் கடப்பதற்கு நமக்கு புத்தகங்கள் வழி வகுக்கின்றன. புத்தகங்கள் அறிவை வளர்க்கின்றன. படிக்க வேண்டும் என்பது சரி, எதைப்படிப்பது..? எவ்வளவு படிப்பது..? நமது புறவய சூழல், அகவய சூழல் ஆகியவற்றின் தேவையை ஒட்டி, நாம் வாசிக்க வேண்டும்.

1. நாம் பணியாற்றும் துறை முன்னிட்டு படிக்க வேண்டியது. (பெண்ணிய செயல்பாட்டாளர் தந்தை பெரியாரின் **“பெண் ஏன் அடிமை யானாள் ”** அவசியம் படித்திருக்க வேண்டும்.)

2. நம்மிடம் பிறர் எதிர்பார்ப்பது என்னவோ, அதற்கு உதவுமாறு படிக்க வேண்டும். ( தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் ஊழியர் நலன், விதிமுறைகள், அரசியல் நிகழ்வுகள் ஆகியவற்றை அவசியம் படிக்க வேண்டும்.)

3. மார்க்ஸ் சொன்னார் **“மொழி ஒரு ஆயுதம்.”** எத்தனை மொழிகள் நமக்குத் தெரிந்திருக்கிறதோ, அத்தனை ஆயுதங்களை நமக்குக் கையாளத் தெரியும் என்பதுதான். நம்மைப் போன்ற தொழிற்சங்க இயக்கத்தில் இருப்பவர்களுக்கு வாசிப்பு என்பது அடிப்படைக் கடமை என்றே சொல் வேன். எத்தனை தலைப்புகளில் படித்திருக்கிறோம் என்பதும் முக்கியம்.

**Knowledge is Power** என்று சொல்கிறோம். அறிவை மேம்படுத்திக் கொள்ள வாசிக்கிறோம். சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் துவங்கி அறிவார்ந்தவர்களின் பட்டியல் மிக நீண்டது. நாமறிந்த அறிவார்ந்தவர்களின் பெயர்களை நினைவுகூரச் சொன்னால் அம்பேத்கர், மகாகவி பாரதி, பெரியார் அவர்களின் பெயர்கள் நம் மனதில் வரும். அவர்கள் எவ்வாறு அறிவில் சிறந்தவர்களாய் மாறினார்கள். பல நூற்களில் சொல்லப்பட்டதை படித்து, உள்வாங்கி, தங்கள் சிந்தனையை வளமாக்கி, தங்கள் அறிவின் மேன்மையை நமக்கு பதிவு செய்திருக்கிறார்கள். காரல் மார்க்சும், ஏங்கெல்சும் **கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை** வெளியிட்டபோது காரல் மார்க்சுக்கு வயது 30. அம்பேத்கர் **இந்தியாவில் சாதிகள்** ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த போது வயது 25. அவர்கள் வாசிப்பில் தீவிரத்தன்மையைக் கடைப்பிடித்தார் கள். அம்பேத்கர் இலண்டனில் இருந்த 3 வருடங்களில் மியூசிய நூலகத்தில் எத்தனை பணி இருந்தாலும் காலையில் திறப்பதற்கு முன் வாயிலில் நிற்பாராம். மாலை காவலாளி பூட்டும் போது இறுதியாய் வெளியேறுவாராம்.

பண்டைய கால வாசிப்பு பற்றி ஒரு வித்தியாசமான தகவல் கிடைத்தது. ரோமப் பேரரசில் இலக்கிய ஆர்வம் உடையவர்கள், செல்வம் மிக்க குடும்பங்கள் தங்கள் வீடுகளில் இலக்கியத்திலும், கலைகளிலும் பயிற்சி பெற்ற அடிமைகளை வைத்திருந்தனர். நாம் ஒரு நூலைப் படிக்க வேண்டும் என்று புத்தகத்தை எடுப்பது போல், அவர்கள் அடிமைகளை

ஒப்பிக்கச் சொல்வார்களாம். அச்சுக் கலை தோன்றாத அக்காலத்தில் கல்வி கற்ற அடிமைகள் வீட்டுக்கு அவசியமாய் இருந்திருக்க வேண்டும்.

சமூகத்தில் நாம் வகிக்கும் பங்கு, ஏற்றிருக்கும் பாத்திரம் ஆகியவற்றுக்கு செறிவூட்டும் வகையில் நாம் வாசிக்க வேண்டும். நிறையப் படித்து விட்டதாலேயே ஒருவர் மேதையாக முடியாது... ஆனால் படிக்காமல் மேதை ஆகவே முடியாது. மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் ஒரு வரி நினைவுக்கு வருகிறது **" அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்து "**. நம் அகந்தையை அகற்றுவதாய் வாசிப்பு அமைய வேண்டும்.

வாசிப்பு புறவய சூழலுக்காக உள்ளதை இதுவரை கூறினேன். அகவயமான வாசிப்பு என்பது நம் ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்பு சார்ந்தது. உள்ளார்ந்த ரசனை என்பது ஒவ்வொருவருக்கும் மாறுபடும். அந்த வாசிப்பு நம்மை மலரச் செய்வதாக இருக்க வேண்டும்.

புத்தகங்களில் நல்ல புத்தகம் கெட்ட புத்தகம் என்று எதுவும் இல்லை. எல்லா புத்தகத்திலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை உண்டு. புத்தகங்கள் மனிதர்களைப் போல... நாம் சந்திக்கும் அனைவரிடமும் நமக்கு தெரிந்து கொள்ள, அறிந்து கொள்ள ஏதோ ஒன்று புதிதாய் இருக்கும்.

ரஷ்யப் பேரிலக்கியங்களில் ஒன்றான, லியோ டால்ஸ்டாய் அவர்கள் எழுதிய **" அன்னா கரீனா "** படித்த அனுபவத்தைப் பகிர்வது சரியாக இருக்கும். அதை எப்படி படித்தேன்..? நவம்பர் மாதம் வாங்கினேன். டிசம்பர் 30 அன்று முடித்தேன். தினசரி படிக்க வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு பக்கங்கள் என்று துவக்கினேன். 42 நாட்களில் முடித்தேன். நமக்கு நாமே இலக்கு வைத்துக் கொண்டு, நமக்கு சற்று கடினமான அளவுகோல்களை வைத்துக்கொண்டு முன்னேற வேண்டும்.

ஏனெனில் சூஃபி கவிஞர் ஒருவர் சொன்னது போல், கடிகாரம் டிக் டிக் என்று ஒலிப்பது, என் ஆயுள்குடம் ஒழுகும் ஓசை என்றார். வாழ்நாள் மிகக் குறைவு. கையில் இருக்கும் காலம் ஒழுகும் நீர்க்குடம்.

**" இருப்பதற்கென்றுதான் வருகிறோம்... இல்லாமல் போகிறோம் "** என்றொரு நகுலன் கவிதை.. இது எனக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அர்த்தத்தைத் தருகிறது. நிலையாமை குறித்த கவிதையாக இது பொதுவாக அறியப்படும். ஆனால், நம் வாழ்வை எப்படித் துவக்குகிறோம்... நம் வாசிப்பு நம்மை எப்படி செழுமைப்படுத்துகிறது. நாம் சுயத்தைக் கரைத்து, கருத்துக்களை உள்வாங்கி, நம்மை நாம் ஒரு செயல்முறைக்கு உட்படுத்தி, என்னவாக மாறுகிறோம்..? ஏதோ ஒரு சிறிய அதிர்வு நம்மில் ஏற்பட்டு, நாம் நமது சிந்தனையை, பார்வையை மாற்றுகிறோம். வாசிப்பு அதிகரிக்க, அதிகரிக்க நாம் பல மாற்றங்களுக்கு உள்ளாகிறோம். அதைத்தான்





காங்கிரஸ் தலைமையோடு ஒருக்காலும் சமரசத்திற்கு வந்திருக்க மாட்டார்கள். இதற்கு இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உண்டு. வரலாற்று ஆராய்ச்சியில் விருப்பம் கொண்ட அன்பர்கள், செம்ஸ்போர்டு சீர்திருத்தம், காந்தி – இர்வின் ஒப்பந்தம், வட்டமேஜை மாநாடு, சிம்லா மாநாடு ஆகியவற்றுக்கு முன்னால் இந்தியாவில் புரட்சி இயக்க நடவடிக்கைகளின் வேகம் எவ்வாறு இருந்தது என்பதை ஒப்பு நோக்கினால் இந்த உண்மை விளங்கும்.

உலகில் இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற நாடு ஒன்று கூட இல்லை. எண்ணற்ற புரட்சி வீரர்களின் இரத்தாபிசேகத்தில் பூத்தெழுந்த புது மலர்தான் இந்திய சுதந்திரம். வரலாறு காட்டும் உண்மை இது..!

இந்த உண்மை மூன்று மாதம் சிறைவாசம் அனுபவித்துவிட்டு தியாகிப் பட்டம் சூட்டிக்கொண்டு திரியும் " மாப்பிள்ளை சத்யாக் கிரகி " களுக்குக் கசப்பாக இருக்கலாம். அதற்காக தூக்குக் கயிற்றை புன் சிரிப்போடு ஏற்று, உயிர்த் தியாகம் செய்த எண்ணற்ற வீரத்தியாகிகளின் மெய்யான வரலாற்றை மறைக்கலாமா..? அந்த இருட்டடிப்புக் கைங்காரியம் தான் இவ்வளவு காலமும் இங்கே நடந்து வருகிறது.

அந்தக் கசப்பான உண்மையை, இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கவே " சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள் " என்ற கட்டுரைத் தொடரை, எனது நண்பரும், தேச பக்தருமான திரு. ஏ.பி.சாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட " சுதந்திரம் " வார ஏட்டில் எழுதத் தொடங்கினேன்.

" சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் " பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்று ஆங்கிலேய வரலாற்றாசிரியர்கள் சரித்திரம் எழுதியிருக்கிறார்கள். அந்த சரித்திரத்தை மாற்றி எழுதியவர்களே இந்தியப் புரட்சியாளர்கள்..! அவர்கள் மீது தொடரப்பட்ட சதி வழக்குகளைப் ( **Conspiracy Cases** ) பற்றி விவரிப்பதே இந்த நூலின் நோக்கம். இந்தியப் புரட்சி இயக்கத்தைப் பற்றிய முழுமையான வரலாறு அல்ல இது..! பாதிதான் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன..! மீதி இன்னொரு நூலாகத்தான் வெளிவர வேண்டும்.

சதி வழக்குகளைப் பற்றி விவரிக்கும் நூலாக இது இருந்தாலும், இந்த எல்லைக்குள் இருந்துகொண்டே, புரட்சி வீரர்களின் வாழ்க்கைப் பின்னணியையும், இயக்கப் பின்னணியையும் சற்று விரிவாகவே எழுதியிருக்கிறேன்.

இதற்கு உதவிய ஆதார நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றின் பட்டியலை இந்த நூலின் இறுதியில் குறிப்பிட்டிருக்கிறேன். கடந்த 22 ஆண்டுகளாக என் வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதிச் சேகரித்த விவரங்களே இன்று நூல் வடிவில் வெளிவந்துளது.

இதன் சில பகுதிகளை 1961 ஆம் ஆண்டில் தேசபக்தர் – தியாகி

" வளர்ந்து வரும் இந்திய இளைஞர் சமுதாயம் நம் இயக்கம் (காங்கிரஸ்) கடைப்பிடித்து வரும் பொறுமையைச் சோதிக்கும் தாமதப் போக்கையும், பயனற்ற மனுப்போடும் பணியையும் கண்டும் கடும் அதிருப்தி யுற்றிருக்கிறது. அதனை மாற்றி புரட்சிகரமான செயல்முறையை உருவாக்க வேண்டியது இன்று நம் முன்னால் உள்ள அவசரப்பணி ஆகும்..! அந்தப் புரட்சி வழி அமைதியான சாத்வீக வழிப்பட்டதா, பலாத்கார வழிப்பட்டதா என்பதை தீர்மானிக்க வேண்டியது நாம் அல்ல..! பிரிட்டிஷ் மக்களும், பிரிட்டானிய அரசாங்கமும்தான். அவர்களது அறிவுடைமை அல்லது அறியாமை வழிப்பட்ட செயல்கள்தான் அதைத் தீர்மானிக்க வேண்டும்..! "

லாலா லஜபதிராயின் இந்த எச்சரிக்கையை அன்றைய காங்கிரஸ் தலைமை செவிமடுத்ததா..? இல்லை..! மாறாக விதி வகுத்தளித்த வழி இதுதான் என்று கூறி தனக்குத்தானே திருப்தியடைந்து கொண்டது..! மிதவாதிகளின் தலைவரான கோகலேயின் பின்வரும் கூற்று ஒன்றே அதற்குத் தகுந்த சாட்சியமாகும் :

" இந்திய தேசத்தின் முன்னேற்றகரமான இந்தக் காலகட்டத்தில் நமது பணி மிகவும் அற்பமாகவே தோன்றும்..! இதை நாம் மறந்துவிடக் கூடாது..! அடிக்கடி நாம் சந்திக்கும் ஏமாற்றங்கள் அலுப்பூட்டக் கூடியவைதான். இருந்தாலும் ஆண்டவன் நமக்கு வகுத்துள்ள விதி அளித்துள்ள பங்கும் இடமும் இதுதான்..! இந்த அளவோடு நமது பணி முடிவடைகிறது..! இன்றைய தலைமுறையினராகிய நாம், நமது தோல்வியின் மூலமே இந்நாட்டுக்குத் தொண்டாற்றினோம். வருங்கால சந்ததியினர் நமது தோல்விகளிலிருந்தே வெற்றிகரமான செயல்முறையை வகுத்துக் கொள்ளத் தேவையான பாடத்தை யும், பலத்தையும் பெற்றுக் கொள்ளட்டும் என்று நாம் திருப்தியடைய வேண்டியதுதான்..! இது ஏற்றுக் கொள்வதற்கு இயலாத சற்றுக் கசப்பான உண்மைதான்..! இருப்பினும் இதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை..! "

கோகலேயின் இந்தக் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியானது..! காங்கிர சின் முதல் தலைமுறையின் மிதவாதப் போக்கினால் விளைந்த தோல்விகளி லிருந்து பாடமும், பலமும் பெற்ற இரண்டாவது தலைமுறை புரட்சி வழியைப் பின்பற்றி ஆயுதம் ஏந்திப் போராடி மகத்தான பல சாதனைகளை நிகழ்த்தி வெற்றிகளைக் குவித்தது..!

புரட்சி இயக்கத்தவர் ஆங்கிலேய அதிகார வர்க்கத்தவர் மீது புலியெனப் பாய்ந்ததைக் கண்டு அஞ்சித்தான் ஆட்சியாளர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் காங்கிரஸ் தலைமையோடு சமரசம் பேச முன் வந்தனர்..! ஆயுதம் ஏந்திப் போராடி உயிர்த்தியாகம் செய்யும் பணிக்கு புரட்சி இயக்க வீரர்கள்..! சமரசம் பேசி, சமாதானம் ஒப்பந்தம் முடித்து சலுகைகளைப் பெற காந்தியத் தலைமை..! புரட்சி இயக்கத்தவரின் தற்கொலைப் படைத் தாக்கு தலும், சர்வபரித்தியாகமும் மட்டும் இல்லாதிருந்தால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்





இக்கவிதையும் சொல்கிறது எனக் கருதுகிறேன்.

புத்தகம் எனக்கு என்னவாக இருக்கிறது என்று கேள்வி எழுப்பினால், " உண்ணுஞ்சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் " என்ற நம்மாழ்வாரின் வார்த்தைகளைச் சொல்லி நிறைவு செய்கிறேன்..!

## உலகச் சிட்டுக்குருவி நாள் 20.3.2017



**சி**ட்டுக் குருவிபோல் சிவ்வெனப் பறந்து
தேயமெல்லாம் திரிய ஆசை
தென்னை மட்டையில் கூடுகள் கட்டிச்
சிறப்பாக வாழ ஆசை.

வாட்டமில்லாமல் தானியம் பொறுக்கி
வானெல்லாம் திரிய ஆசை
கூட்டங் கூட்டமாய் வானிற் பறந்து
கொண்டாடி மகிழ ஆசை.


ஓடை நீரிலே முக்கி முழுகி
உயரே பறக்க ஆசை
வாடைக் காற்றில் குளிரில் நடுங்கி
மரத்தின் மேல் குந்த ஆசை.

நுண்கதிர் வீச்சின் அலையின் வெப்பினால்
நொறுங்கா திருக்க ஆசை
திண்ணிய மனமும் தெளிவான கருத்தும்
சிறக்கப் பயின்றிட ஆசை.

சிறுதானியங்கள் பொறுக்கிக் கொணர்ந்தே
குஞ்சுகட் கூட்ட ஆசை
துரு துரு வென்றே துள்ளிக் குதித்து
தூங்காதிருக்க ஆசை.

உலகச் சிட்டுக் குருவிநாள் இன்று
உள்ள மெல்லாம்
மகிழ்வே நிலைபெற்றுச்
சிட்டுக் குருவிபோல்
வானில் நீந்தி மகிழ ஆசை.

– கவிஞர் தமிழன்பன் ப. முத்துச்சாமி –






# சரித்திரத்தை மாற்றிய சதிவழக்குகள்

நூலின் முன்னுரை

– சிவலை இளமதி –

“ **நீ**ண்ட நெடுங்காலத்திற்கு முன்னர், விதியோடு நாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம். இப்போது அதைச் சந்திக்கும் நேரம் வந்திருக்கிறது. நமது உறுதிமொழிகள் அனைத்தையும் முழுமையாக இல்லாவிட்டாலும் கணிசமான அளவுக்கேனும் பூர்த்தி செய்ய வேண்டிய நேரமிது..!

உலகம் முழுவதும் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த நள்ளிரவு வேளையில், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு ஜீவத் துடிப்போடு விழித்தெழு கிறது.! ” என்றார் பண்டித ஜவஹர்லால் நேரு, 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று..!

இந்த சுதந்திர விடியலைக் காண நடந்த விடுதலைப் போர் வேள்வியில் குதித்து, மாடு, மனை, வீடு, கோடி செல்வம் அனைத்தும் துறந்து வெஞ்சமர் புரிந்த வீரர்கள் எத்தனை பேர்..? சக்திகள் எத்தனை..? இயக்கங்கள் தான் எத்தனை எத்தனை..?

அவற்றை முறையாக எடுத்துக் கூறும் வரலாறுகள் உண்டா..? முறைப் படி தொகுத்தளிக்கும் முயற்சிகள்தான் உண்டா..? என்றால், இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தலைகாட்டும் அரைகுறை வரலாறுகளும், அவரவர் மனப்போக்கு, மாநிலப்போக்கு, கட்சிப்போக்கு, மதப்போக்கு ஆகியவற்றுக்கு ஏற்றபடி உண்மைகளைக் கூட்டிக் குறைத்து, மாற்றித் திரித்து எழுதப்பட்ட சில நூல்களும்தான் காணப்படுகின்றனவே தவிர, முழுமையான வரலாறு, மெய்யான பாரபட்சமற்ற வரலாறு இல்லை என்ற முடிவுக்கே வர நேரிடுகிறது.

1857 ஆம் ஆண்டுக்கு முந்தைய நூற்றாண்டுகளிலே நடந்த விடுதலைப் போர்களைப் பற்றியும், அவற்றை முன்னின்று நடத்திய பூலித்தேவன், கட்டபொம்மன், சின்ன மருது, பெரிய மருது, வேலு நாச்சியார், விஜயநகர மன்னர் ஹைதர் அலி, திப்பு சுல்தான் போன்ற வீர மன்னர்கள், பாளையக்காரர்களைப் பற்றி சரியான வரலாறு உண்டா..? இல்லை..! ஆங்கிலேயத் தளபதிகள் எழுதி வைத்த குறிப்புகள், ஆவணக் காப்பகங்களில் உள்ள ஒரு சார்பு தஸ்தாவேஜ்கள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நுனிப்புல் மேயும் மேம்போக்கான வரலாறுகள்தான் இன்றளவும் அதிகாரப் பூர்வ வரலாறுகளாக உலவுகின்றன.





அரசாங்கத்தின் மேல் அளவு கடந்த அதிருப்தி கொண்டிருந்தனர். இந்த இரு தரப்பினரும் இணைந்துவிட்டால் சக்தி மிக்க எதிர்ப்பு அணி உருவாகி விடுமே..! படித்த இளைஞர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த ஓர் அமைதியான அரசியல் இயக்கத்தை அனுமதித்துவிட்டால், அது அவர்களது மனக் கொதிப்பை வெளியிடும் வடிகாலாக ( Out let ) பயன்படும்..! இந்திய விவசாயிகளுக்கும், பிரிட்டிஷ் அரசுக்கும் இடையே மோதல் ஏற்படாமல் தடுக்கும் ஒரு தடுப்புச் சக்தியாக ( **Safety Valve** ) காங்கிரஸ் பயன்படும் என்று நான் கருதினேன் ..! ” என்று ஏ.ஓ. ஹியூம் காங்கிரசைத் தொடங்கியதற்குக் காரணம் கூறியிருக்கிறார்..!

ஏ.ஓ. ஹியூமோடு சேர்ந்து காங்கிரசைத் தொடங்கிய இந்தியத் தலைவர்களின் எண்ணம் யாது..? காந்திஜியின் அரசியல் குருநாதரான கோபாலகிருஷ்ணன் கோகலே கூறுகிறார் :

“ காங்கிரசை தேசிய அளவில் இந்தியர் எவரும் தொடங்கியிருக்க இயலாது. அதை ஆங்கில அரசு அனுமதிக்கவும் செய்யாது. அரசின் நம்பிக்கையைப் பெற்ற அதன் முன்னாள் ஊழியராகவும், ஆங்கிலேயராகவும் இல்லாதிருந்திருந்தால் ஏ.ஓ. ஹியூம் காங்கிரசைத் தொடங்க அனுமதிக்கப் பட்டிருக்க மாட்டார். இந்தியர் யாராவது தேசிய அளவில் காங்கிரசைத் தொடங்கியிருந்தால் ஆங்கில அரசு அதை எப்படியாவது நசுக்கி அழிக்கவே முயன்றிருக்கும்..! அக்கால அரசியல் நிலவரம் அப்படிப்பட்டது..! ”

கோகலே பூனா சர்வஜன சபையின் சார்பில் 1891 இல் அரசாங்கத் திற்கு தயாரித்தனுப்பிய ஒன்றுக்கு பம்பாய் அரசாங்கம் இரண்டே வரியில் பதில் அனுப்பியதைக் கண்டு ஜஸ்டிஸ் ரானடேயிடம் வருத்தப்பட்டுக் கொண்டாராம்..! அதற்கு ஜஸ்டிஸ் ரானடே சொன்ன பதில் என்ன தெரியுமா..?

“ இந்திய சரித்திரத்தில் நமது இடம் என்ன என்பதை நீங்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை போலும். இந்த நீண்ட மகஜர்களை அரசாங்கத்திற்கு அனுப்பவே நாம் தயாரிக்கிறோம் என்றாலும், உடனே அதற்குப் பலனை எதிர்பார்த்து அல்ல..! இம்மாதிரி விசயங்களில் எப்படி சிந்திக்க வேண்டும் என்பதை நமது மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதுதான் உண்மையான நோக்கம். இந்தப் பணியை இன்னும் பல்லாண்டுக்காலம் நாம் தொடரவேண்டும்..! ஏனென்றால் இப்படிப்பட்ட அரசியல் பணி நமது மக்களுக்கு இதுவரை அறிமுகமில்லாத ஒரு புதிய பணி ஆகும்..! ” என்றாராம் ரானடே.

ஆனால், சில சில்லரைக் கோரிக்கைகளுக்காக மகஜர் தயாரித்து மனுப் போட்டு கெஞ்சிக் கொண்டிருக்கும் காங்கிரசின் மிதவாதப் போக்கை அக்கால இளைஞர்கள் மிக மிக வெறுத்து வந்தனர். இதை தீவிரவாதத் தலைவரான லாலா லஜபதிராய், டி.இ.வாச்சா என்ற காங்கிரஸ் தலைவருக்கு 1905 ஜனவரி 12 ஆம் தேதியிட்டு எழுதிய ஒரு கடிதத்தில் எடுத்துக் காட்டி உள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் காந்திஜியின் பங்கு என்ன என்பதைப் பார்த்தோம். அவர் ஆதிக்கம் செலுத்திய காங்கிரசின் விடுதலைப் போராட்டப் பங்கு என்ன..? 1918 ஆம் ஆண்டில் சௌரி சௌரா சம்பவத்தைக் காரணம் காட்டி வெகுஜன எழுச்சியோடு நடந்த ஒத்துழையாமை இயக்கத்தை தன்னிச்சையாக ஒத்தி வைத்தது. 1932 – ஆம் ஆண்டில் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தை, இரகசிய முறைகள் இயக்கத்தில் புகுந்துவிட்டன என்று காரணம் கூறி திடீரென்று நிறுத்தியது. பகத்சிங், கோபிநாத் சாகா, உத்தம்சிங் போன்ற தன்னலமற்ற மாவீரர்களின் வீரச் செயல்களுக்கும் காங்கிரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று அறிவித்தது. பூரண சுயராஜ்யமே எங்கள் லட்சியம் என்று 1929 ஆம் ஆண்டிலேயே தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, 1939 இல் இரண்டாம் உலகப் போரில் சிக்கிக் கொண்டு தவித்த பிரிட்டனுக்கு இந்தியா இறுதி எச்சரிக்கை கொடுத்துவிட்டு எதிர்க்க வேண்டும் என்று வற்புறுத்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவர் சுபாஷ் சந்திரபோசை காங்கிரசி லிருந்தே விலக்கி வைக்க காரணகர்த்தாவாக விளங்கியது. 1942 ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் போட்டு, செய் அல்லது செத்துமடி என்ற கட்டளையையும் பிறப்பித்து விட்டு, அதைச் செயல்படுத்த ஆகஸ்டுப் புரட்சியில் குதித்த இலட்சோப இலட்சம் காங்கிரஸ்காரர்களின் வீர சாகசங்களுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை என்று 1944 இல் அறிக்கை விட்டது போன்ற முதுகில் குத்தும் கைங்காரியத்தைத்தான் அகிம்சையின் பெயரால் காந்தியத் தலைமை அவ்வப்போது செய்து வந்தது.

ஒரு மகத்தான விடுதலை இயக்கம், தேச மக்களின் விடுதலை ஆவேசத்தோடு இணைந்து செயல்பட முடியாமல் ஒவ்வொரு கட்டத்திலும் முட்டுக்கட்டை போடப்பட்டு, முக்கி முனகிய பரிதாபகரமான சம்பவங்கள்தான் காந்திய இயக்கத்தின் சாதனையாக விளங்குகின்றது.

காந்திஜியின் ஆதிக்கம் பரவாத 1918 – க்கு முந்தைய காங்கிரஸ் மகாசபையின் பங்கு என்ன..? 1885 ஆம் ஆண்டில் சர். ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஓய்வு பெற்ற பிரிட்டிஷ் அதிகாரியான ஆங்கிலேயர்தான் காங்கிரசை ஆரம்பித்தார். டபிள்யூ.சி. பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, ஜஸ்டிஸ் எம்.ஜி. ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, ஜி.சுப்பிரமணிய அய்யர், எஸ். சுப்பிரமணிய அய்யர், சுரேந்திரநாத் பானர்ஜி, பத்ருதீன் தயாப்ஜி போன்ற இந்தியர்கள் அவருக்குத் துணையாக நின்றனர்.

மாட்சிமை தாங்கிய மன்னர் பிரானுக்கு வாழ்த்துப்பாடி கூட்டத்தைத் தொடங்கி, ராஜ விசுவாசத் தீர்மானத்தை முதலிலும், சில சில்லரை சீர்த்திருத் தங்களைக் கோரும் தீர்மானங்களை கடைசியிலும் நிறைவேற்றி விட்டுக் கலைந்து செல்லும் படித்த மேல்தட்டு வர்க்க இந்தியர்களின் சங்கமமாகவே பம்பாய் நகரில் காங்கிரஸ் மகாசபை தொடங்கிற்று. ஏ.ஓ. ஹியூமுக்கு இந்திய தேசிய காங்கிரசைத் தொடங்குவதில் ஏன் அவ்வளவு அக்கறை..?

“ படித்த இந்தியர்களும், விவசாயி மக்களும் பிரிட்டிஷ் இந்திய





அதன் பின்னர் நடந்த சன்னியாசிகள் கலகம், நாமதாரிகள் இயக்கம், சீக்கிய அகாலியர் புரட்சி, இஸ்லாமியரின் எழுச்சி ஆகியவற்றுக்கும் சரியான வரலாறு கிடையாது.

டெல்லி மன்னர் பகதூர்ஷாவை இந்தியாவின் சக்கரவர்த்தியாகப் பிரகடனப்படுத்திவிட்டு, ஜான்சிராணி லட்சுமி பாயும், பேகம் ஹஸரத் மகாலும், நானாசாகேப்பும், தாந்தியா தோபேயும், அஸிமுல்லாகானும், குன்வார்சிங்கும், ராஜா தேஜ சிம்மனும், பிரதாப் சிம்மனும், மீரட் வீரன் மங்கள்பாண்டேயும் பிறரும் 1857 ஆம் ஆண்டில் பிரிட்டிஷாரை எதிர்த்துப் புரட்சிக் கொடியை உயர்த்திக் களம் புகுந்த முதல் சுதந்திரப் போரைப் பற்றி அதிர்ஷ்டவசமாக அதிகாரப்பூர்வமான வரலாறுகள் உள்ளன.

ஆனால், அதற்குப் பின்னர் 1872 ஆம் ஆண்டில் நடந்த வஹாபியர் புரட்சி, குக்கா இராணுவப்புரட்சி, 1876 இல் வாசுதேவ் பல்வந்த் பட்கே திரட்டிய ராமோசிகோலியர் படை புரட்சி, 1897 – 98 ஆம் ஆண்டுகளில் திலகரின் தலைமையில் பீறிட்டுக் கிளம்பிய மராட்டிய மாவீரர்களான சபேகர் சகோதரர் களின் வீரசாகசங்கள் ஆகியவற்றுக்கு முறையான வரலாறு உண்டா..? இல்லை..!

1900 முதல் 1910 வரை அரவிந்தர் தலைமையில் மராட்டியத்திலும், சுபிஅம்பாபிரசாத், அஜித்சிங், லாலாலஜபதிராய் ஆகியோர் தலைமையில் பஞ்சாபிலும், மேடம் காமா, ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா ஆகியோர் தலைமை யில் அயல் நாடுகளிலும், வ.உ.சி. தலைமயில் தமிழகத்திலும் நடந்த விடுதலைப் போராட்ட புரட்சிகளைப் பற்றி அதிகாரப்பூர்வமான விரிவான வரலாறு உண்டா..? இல்லை..!

1910 முதல் 1915 வரை ஜதீந்திரநாத் முகர்ஜி, ராஷ்பிகாரி போஸ் ஆகியோரின் முயற்சியாலும், அமெரிக்கா, கனடாவில் லாலா ஹர்தயாள், பாபாசோகன்சிங் பாக்னா ஆகியோர் தொடங்கிய கதர்க் கட்சி வீரர்களின் உதவியோடும் வடமாநிலங்களில் நடத்தப்பட்ட இரண்டாவது சுதந்திரப் போரை பற்றியாவது முறையான முழுமையான வரலாறு உண்டா..? இல்லை..!

1915 முதல் 1930 வரை பஞ்சாபில் பகத்சிங், ஆந்திராவில் அல்லூரி சீத்தாராம ராஜு, மத்திய மாகாணத்தில் சந்திரசேகர ஆசாத், உத்திரப் பிரதேசத்தில் சச்சீந்திரநாத் சன்யால், வங்காளத்தில் சூர்யா சென் ஆகியோர் தலைமையில் வெடித்தெழுந்த இந்திய சோசலிசக் குடியரசு சங்கம், ரம்பா பழங்குடி மக்கள் படை, அனுசீலன் சமிதி முதலிய புரட்சி இயக்கங்கள் நடத்திய வீர சாகசங்களைப் பற்றியும், புனிதப் போராட்டத்தைப் பற்றியுமாவது முறையான வரலாறு உண்டா..? இல்லை..! இந்த மூன்றாவது கட்ட சுதந்திரப் போரின் மற்றொரு பகுதியான காந்தியப் போராட்டங்களைப் பற்றி மட்டும் விரிவான வரலாறுகள், ஏன் தேவைக்கு அதிகமாக – மிகைப்படுத்தப்பட்டும் எழுதப்பட்டுள்ளன.

இந்திய சுதந்திரப் போர் வரலாற்றில் காந்திய சகாப்தம் என்பது 1915ல் காந்திஜி தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர்தான் தொடங்கியது. 1917 ஆம் ஆண்டில் சம்பரான் சத்தியாக்கிரகம் நடந்தபோதுதான் காந்திஜியைப் பற்றி இந்திய மக்களுக்கு ஓரளவு தெரிய ஆரம்பித்தது. 1920 ஆம் ஆண்டில் ஒத்துழையாமைப் போராட்டத்தை காந்திஜி ஆரம்பித்தபோதுதான் இயக்கத் தலைமைப் பொறுப்பு அவருக்கு வாய்த்தது. அதன் பின்னர்தான் காங்கிரஸ் கட்சியின் மீது அவரது ஆதிக்கம் ஆழமாகப் பதிந்து அழுத்தமாக வேரூன்றியது.

1920 முதல் 1930 ஆம் ஆண்டு வரை காந்திஜி நடத்திய சட்ட மறுப்பு சத்தியாக்கிரகம், அன்னியத்துணி பகிஷ்கார இயக்கம், சுதேசி இயக்கம் (1905 – 1910 ஆம் ஆண்டுகளில் அரவிந்தர், திலகர், விபின் சந்திரபால், வ.உ.சி முதலிய தீவிரவாதிகள் அறிமுகப்படுத்திய போராட்டங்கள்தாம்) உப்பு சத்தியாக்கிரகம், வரிகொடா இயக்கம் ஆகியவற்றில் இந்திய மக்களின் பங்கும் ஈடுபாடும் அந்தப் போராட்டங்களில் அதிகமாகவும் தேசிய அளவிலும் இருந்ததால் புரட்சிவாதிகள் கூட அவற்றில் விருப்பத்தோடு கலந்து கொண்டனர். மாணவர்களும் இளைஞர்களும் பல்லாயிரக் கணக்கில் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் சிறைகளில் இடமில்லாமல் நிரம்பி வழியும் அளவுக்கு லட்சக்கணக்கான சத்தியாக் கிரகிகள் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றனர். மூன்றாவது சுதந்திரப் போர் என்று கூறத்தக்க இந்தப் போராட்டங்களில் 1920 – 1930 ஆம் ஆண்டுகளில் ஒரு பத்தாண்டு காலம் மட்டும் காந்தியத் தலைமை சக்திமிக்க தலைமையாக விளங்கியது. வேறு எப்போதும் காந்தியத் தலைமை இவ்வளவு வலிமையோடு செயல்பட்டதில்லை என்பதுதான் வரலாறு காட்டும் உண்மையாகும்.

1940 – 45 ஆம் ஆண்டுகளில் காந்தியத் தலைமை இந்திய விடுதலைப் போருக்கு பெயரளவுக்குத் தலைமை தாங்கியதே தவிர, போராட்டங்களை நடத்திய சக்திகள் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவைதாம்..! தொழிலாளர் விவசாயிகள் இயக்கங்களும் மற்ற இடதுசாரி கட்சிகளும்தான் இந்தக் கால கட்டத்தில் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கின..!

1942 ஆகஸ்ட் 8 ஆம் தேதியன்று பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு (**Quit India**) தீர்மானம் நிறைவேறியது..! செய் அல்லது செத்துமடி (**Do or Die**) என்ற கட்டளைக் கோஷத்தையும் கொடுத்தார் காந்திஜி..! ஆனால் அடுத்த நாளன்றே காந்தி, நேரு, சரோஜினி தேவி, வல்லபாய் பட்டேல், ராஜேந்திரப் பிரசாத், மௌலானா அபுல்கலாம் ஆசாத் முதலிய காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனர்.

அதன் பின்னர் ஆகஸ்டுப் புரட்சி இமயம் முதல் குமரி வரை கொழுந்துவிட்டு எரிந்தது. காங்கிரஸ்காரர்கள் தாங்களே தலைவர்களாகி வீரஞ்செறிந்த போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினர். ரயில்கள் கவிழ்க்கப் பட்டன. தந்திக் கம்பங்கள் அகற்றப்பட்டன. அரசாங்க அலுவலகங்களும்,





போலீஸ் நிலையங்களும் சூறையாடப்பட்டன. நீதி மன்றங்கள் தேசியவாதி களால் கைப்பற்றப்பட்டன. நாடெங்கும் சதாரா, மிதுனப்பூர், அஸ்தி, சிமூர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் சுதந்திர அரசுகள் அமைக்கப்பட்டன. அருணா ஆஸப் அலி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், அச்சுதபட்டவர்த்தன், யூசுப் மேஹர் அலி, ராம் மனோகர் லோகியா, உஷா மேத்தா போன்ற சோசலிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாகி ஆகஸ்டுப் போராட்டத்தை தளர்ச்சியுறாமல் நடத்தினர். காமராஜர் தலைமையில் தமிழகத்திலும், பிரகாசம், சஞ்சீவரெட்டி தலைமையில் ஆந்திரத்திலும், ஒய்.பி. சவான் தலைமையில் மராட்டியத்திலும் ஆகஸ்டுப் புரட்சி அடங்காத காட்டுத்தீயாகப் பரவியது. இதை நான்காவது சுதந்திரப் போராட்டம் என்று அழைக்கலாம்.

இந்த நான்காவது சுதந்திரப் போருக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை என்று அறிவித்ததுதான் காந்தியத் தலைமை செய்த மகத்தான தொண்டு. இந்த நான்காவது சுதந்திரப் போரைப் பற்றியாவது முறையான வரலாறு உண்டா..? இல்லை. இன்றுவரை இல்லை என்பதுதான் பதில்.

காந்திஜியின் தலைமை இந்திய விடுதலைப் போருக்கு ஒரு கால கட்டத்தில் மகத்தானதாக விளங்கியது என்ற உண்மையை, காந்திஜியோடு கடுமையான கருத்து வேற்றுமை கொண்டு விலகிச் சென்ற நேதாஜி சுபாஷ் சந்திர போசே ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் காந்திஜியின் தலைமையை ஒப்புக் கொள்ள மறுத்தவர்களும், ஒதுங்கி நின்றவர்களும், புரட்சி வழியைக் கடைப்பிடித்தவர்களும், தீவிரவாத காங்கிரஸ்காரர்களும் விடுதலைப் போருக்கு ஆற்றிய பங்கு பணியைக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது என்பதுதான் நமது வேண்டுகோள்..!

1941 இல் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இந்தியாவைவிட்டு வெளியேறி ஆப்கானிஸ்தான், ரஷ்யா வழியாக ஜெர்மனிக்குச் சென்று இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளின் உதவியைப் பெற்று 1943 அக்டோபர் மாதம் சிங்கப்பூரில் தற்காலிக சுதந்திர அரசை (ஆஸாத் ஹிந்த் அரசாங்கம்) நிறுவி, பிரிட்டன், அமெரிக்கா மீது போர்ப்பிரகடனம் வெளியிட்டு பர்மா அரக்கான் குன்றுகளின் வழியாக “ **டெல்லி சலோ** ” என்ற முழக்கத்துடன் இந்திய தேசிய இராணுவத்தை அனுப்பி, இம்பால் முனையில் இந்தியாவின் இறுதி விடுதலைப் போரை நடத்தினாரே, அந்த ஐந்தாவது சுதந்திரப்போர் வரலாறாவது ஆதாரப்பூர்வமாக எழுதப்பட்டு உள்ளதா..? அதற்கும் வழக்கமான பதில்தான். ‘ இல்லை ’ என்ற முகச் சுளிப்புதான்.

இந்திய விடுதலைப் போரை ஐந்து கட்டமாக பகுத்துப் பார்த்தால் மூன்றாவது கட்டத்தில் மட்டுமே காந்தியத் தலைமை வலுவாக விளங்கியிருக் கிறது என்பதும், மீதி நான்கு கட்டங்களிலும், தலைமையேற்று நடத்தியது ஜான்சிராணி முதல் நேதாஜி வரையுள்ள புரட்சித் தலைவர்கள்தான் என்ற உண்மையும் தெளிவாகும்.